**நெல் விலை வீழ்ச்சி, அரிசி விலை கடும் உயர்வு**

First Published : 04 Feb 2010 12:11:11 AM IST
Last Updated : 04 Feb 2010 05:31:10 AM IST



சிதம்பரம், பிப். 3: சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் விளைந்த நெல்லை வியாபாரிகள் சென்ற ஆண்டை விட குறைவான விலைக்கு கொள்முதல் செய்யும் கொடுமை நிலவுகிறது. வியாபாரிகள, நெல் புரோக்கர்கள் ஒன்றுக் கூடி பேசி விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு நெல்லை வாங்குகின்றனர்.

சென்ற ஆண்டு 60 கிலோ பிபிடி நெல் ஆரம்ப விலையாக ரூ.850-க்கு விற்கப்பட்டது. பின்னர் ரூ. 1200 வரை விற்பனையானது.

இந்த ஆண்டு ஆரம்ப விலையே ரூ.730 அல்லது ரூ.740-க்கு விற்கப்படுகிறது. தமிழக அரசும், மத்திய அரசும் நெல்லுக்கான குறைந்தபட்ச விலையை குவிண்டாலுக்கு ரூ.1500 என அறிவித்திருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்காது.

தமிழக அரசு தற்போது குவிண்டாலுக்கு ரூ.1050 என விலை நிர்ணயம் செய்துள்ளது. இந்த விலை தற்போதைய வேளாண் செலவுக்கு கட்டுபடியாகாது என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

காலம் தாழ்ந்த காவிரி நீர்வரத்து, தாறுமாறான மின்வெட்டு, ஊகிக்க முடியாத உழவுத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு, பருவம் தவறிய மழைப் பொழிவு, நுகர் பொருள்களின் விலையேற்றம் ஆகிய அனைத்து முனைகளிலும் நெருக்குதல்களை சந்தித்து விவசாயிகள் விளைவித்த நெல்லுக்கும் அடிமாட்டு விலை வழங்கப்படுவது விவசாயிகளின் எதிர்காலத்தை மேலும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

விவசாயிகள் விளைவித்த நெல்லின் விலை இவ்வளவு கீழாக அழுத்தப்படும் போதுதான் வெளிச்சந்தையில் அரிசியின் விலை கிலோ ரூ.40-க்கு விற்கப்படுகிறது. விவசாயிகளை பயன்படுத்தும் பிற நுகர்வுப் பொருள்களின் விலை இந்த ஓராண்டில் மட்டும் 30 சதவீதம் உயர்ந்துள்ளது.

தற்போது நெல் விலை வீழ்ச்சியால் நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும் லாபம் கிடையாது, அரிசி வாங்கும் நுகர்வோர்களுக்கும் லாபம் கிடையாது. வியாபாரிகள்தான் லாபம் அடைக்கிறார்கள்.

இவ்வாறு நெருக்கடியில் சிக்கியுள்ள விவசாயிகளையும், வேளாண்மையையும் பாதுகாக்க தமிழக அரசு நெல் கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு ரூ.1500 என அறிவித்து தனியார் வியாபாரிகளும் இதே விலையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக உழவர் முன்னணி கடலூர் மாவட்டச் செயலர் சி.ஆறுமுகம் முதல்வருக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

**மீன்பிடி சட்டத்தை திமுக எதிர்க்கும்**

First Published : 04 Feb 2010 12:10:03 AM IST



சென்னை, பிப். 3: கடலோர மீன்பிடி பாதுகாப்பு சட்டம் வந்தால் அதை திமுக எதிர்க்கும் என்றார் முதல்வர் கருணாநிதி.

அந்தச் சட்டம் குறித்து திமுக அக்கறை காட்டவில்லை என மார்க்சிஸ்ட் கட்சி குற்றஞ்சாட்டுவது பற்றி கேட்டதற்கு அவர் அளித்த பதில்:

அந்தச் சட்டம் வருவதாக செய்தி வந்தவுடன் தமிழக அரசு சார்பில் மத்திய அரசுக்கு கடிதம் எழுதினேன். அதற்கு மத்திய அமைச்சர் சரத் பவார் உறுதிமொழி கொடுத்தார். மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் மூலமாகவும் உறுதி மொழி அளித்தார். ஆரம்பத்திலே எனக்கு எழுதிய கடிதத்திலும் அதைக் குறிப்பிட்டுள்ளார்.

இப்போது அது சட்டமாக கொண்டு வரப்படும் நிலைமை இல்லை. அதற்கான எந்த முயற்சியும் நடக்கவில்லை. மீனவர்களைத் தங்கள் பக்கம் இழுக்க சில அரசியல்வாதிகள், சட்டம் வந்துவிட்டதைப் போல போராட்டம் என்று கூறுகிறார்கள். அந்தச் சட்டம் இதுவரையில் வரவில்லை. வந்தால் திமுக அதை கடுமையாக எதிர்க்கும் என்றார் முதல்வர்.

திருமணப் பதிவை கட்டாயமாக்கும் சட்டம் மத்திய அரசு கொண்டு வந்தது என்று குறிப்பிட்ட அவர், சிறுபான்மையினரின் உரிமையைப் பாதிப்பது பற்றி சிறுபான்மையோரின் பிரதிநிதிகளிடம் கலந்து ஆலோசிக்க இருப்பதாகத் தெரிவித்தார்.

**இறால் குஞ்சுகளைப் பரிசோதிக்க தரமான ஆய்வுக் கூடங்கள்**

First Published : 03 Feb 2010 09:18:20 AM IST

Last Updated : 03 Feb 2010 10:31:57 AM IST

தஞ்சாவூர், பிப். 2: நோய் தாக்காத ஆரோக்கியமான இறால் குஞ்சுகளைப் பரிசோதிக்க உதவும் தரமான ஆய்வுக் கூடங்களை இந்திய அரசின் கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையகம் பரிந்துரை செய்துள்ளது.

இதுதொடர்பாக ஆணையகத்தின் துணை இயக்குநர் (தஞ்சாவூர்) சி.ஜெ. சம்பத்குமார், செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

2007-08 ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து 1.36 லட்சம் டன் அளவிற்கு ஏற்றுமதியான இறால்களின் அளவு, கடந்த 2008-09 ஆம் ஆண்டில் 1.26 லட்சம் டன்னாகக் குறைந்துவிட்டது. இதற்குப் பல காரணங்கள்

இருந்தபோதிலும், வெண்புள்ளி வைரஸ் நோய்த் தாக்குதல்தான் பிரதானம். இந்த வைரஸ் தாக்கம் காணப்பட்டால், அதைப் போக்குவதற்கு இதுவரை, உலகில் எந்த மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை.

வருமுன் தடுப்பது ஒன்றுதான் சரியான வழியாகும். இதற்கு மிகச் சிறந்த பண்ணை மேலாண்மை முறையைப் பின்பற்ற வேண்டும். சரியான விதத்தில் பண்ணையைத் தயார்படுத்துதல், நீர் மேலாண்மை, பி.சி.ஆர். பரிசோதனை செய்த வளமான இறால் குஞ்சுகளைப் பொறிப்பகத்தில் தேர்வு செய்தல், சரியான முறையில் தீவனமிடுதல், குழுவாகச் செயல்படுதல் போன்ற வழிமுறைகளால் இந்த வெள்ளைப்புள்ளி இறால் நோயின் தாக்கத்திலிருந்து இறால்களைக் காக்கலாம்.

இறால் குஞ்சுகளை பி.சி.ஆர். பரிசோதனை செய்ய 11 ஆய்வுக் கூடங்களை கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையகம் தேர்வு செய்துள்ளது. அவை:

ராம் அக்வா-கூனிமேடு, சீ.பீ.அக்வாகல்சர்-செட்டிக்குளம், இண்டஸ் அக்வா-மரக்காணம், என்.கே. மெரைன்-மரக்காணம், சீ.பீ. அக்வாகல்சர்-மரக்காணம், எம்பையோசிஸ் இந்தியா-மரக்காணம், வைசாகி பையோ மெரைன்-கைபனிக்குப்பம், குரோபெஸ்ட் பீட்ஸ்-புதுநடுக்குப்பம், ஜீனோம்பார்க் ஷ்ரிம்ஸ் ரிசர்ச் டையாகனஸ்டிக் இன்ஸ்டிட்டியூட்-பனையூர், பாட்லாப் பையோடெக்-நீலாங்கரை, ஆசியன் அனாலிட்டிகல் லபாரேட்டரீஸ்-பாலவாக்கம்.

### தென் மாவட்டங்களுக்கு 1000 டன் சம்பா நெல் மூட்டைகள்

First Published : 03 Feb 2010 10:03:31 AM IST

கும்பகோணம், பிப்.2: கும்பகோணத்திலிருந்து ரயில் மூலம் தென் மாவட்டங்களுக்கு 1000 டன் சம்பா நெல் மூட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டன.

சம்பா அறுவடை கும்பகோணம் பகுதியில் தீவிரமடைந்திருப்பதால் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

கொள்முதல் செய்யப்படும் நெல்லைத் தினமும் ஏராளமான லாரிகளில் மூட்டைகளாக இப்பகுதியில் உள்ள சன்னாபுரம், நீலத்தநல்லூர், திருநாகேஸ்வரம் உள்ளிட்ட இடங்களில் உள்ள திறந்த சேமிப்புக் கிடங்குகள், கும்பகோணம்,திருநாகேஸ்வரத்தில் உள்ள நுகர்பொருள் வாணிபக்கழகத்திற்கு சொந்தமான கிடங்குகளில் இருப்பு வைக்கப்படுகின்றன.

கடந்த 3 தினங்களாக இங்குள்ள ரயில் நிலையத்திலிருந்து தலா 20 வேகன்களில் தலா ஆயிரம் டன் என மூவாயிரம் டன் நெல் மூட்டைகள் சென்னை, மதுரை, தர்மபுரிக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

செவ்வாய்க்கிழமை காலை சுமார் 100 லாரிகளில் 1000 டன் நெல் மூட்டைகள் கொண்டு வரப்பட்டு, ரயில் வேகன்களில் ஏற்றப்பட்டு, திருநெல்வேலி மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன. மாவட்டத்தில் நெல் அறுவடை வேகமாக நடைபெற்று வருவதால் நெல் மூட்டைகள் தினமும் வெளிமாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

**இயற்கை வேளாண்மை கருத்தரங்கு**

First Published : 04 Feb 2010 03:08:07 AM IST

ஆரணி, பிப்.3: பெரணமல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் புதன்கிழமை இயற்கை வேளாண்மை கருத்தரங்கு நடைபெற்றது.

செய்யாறு கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் சி.மனோகரன் தலைமை தாங்கினார். திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு ஒன்றியம், தனி அலுவலர் ஆறுமுகம், திருவண்ணாமலை வேளாண்மை துணை இயக்குநர் வீரமணி ஆகியோர் பங்கேற்றனர்.

சிறப்பு விருந்தினராக கோயம்புத்தூர் வேளாண்மை உதவி இயக்குநரும், அங்கக சான்றளிப்பு துறை மதிப்பீட்டாளருமான ரபியுல்லா பங்கேற்று, வேளாண்மையில் உரம், பூச்சி மருந்து இல்லாமலும், மண் வளம் பாதுகாக்கவும், இயற்கை வேளாண்மையில் பயிரிட ஆலோசனை வழங்கினார்.

கருத்தரங்கில் சென்னை கிரிப்கோ முதுநிலை மேலாளர் குமரேசன், தனிஅலுவலர் சுப்பிரமணியன், கூட்டுறவு கடன் சங்கச் செயலர் ராமசாமி, வேளாண்மை அலுவலர்கள் சத்தியமூர்த்தி, வடமலை கூட்டுறவு ஒன்றிய வளர்ச்சி அலுவலர் துரைராஜ் மற்றும் பணியாளர்கள், விவசாயிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**பருத்திக்கு கூடுதல் விலை**

First Published : 04 Feb 2010 08:38:04 AM IST

கோபி பிப்.3: கோபி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் சென்றாண்டு மழை குறைவால் பருத்தி உற்பத்தியும் குறைந்துள்ளது. இதனால் சென்றாண்டை விட பஞ்சுக்கு கூடுதல் விலை கிடைத்துள்ளது.

உலகளவில் இநதியாவில்தான் அதிகளவில் பருத்தி பயிரிடப்பட்டு வந்தது. நாளடைவில் சீதோஷ்ண நிலையில் மாற்றம், மழை குறைவு, விவசாய கூலியாட்கள் பற்றாக்குறை காரணமாக பருத்தி சாகுபடி கணிசமான அளவு குறைந்தது.

பருத்தி சாகுபடி மற்றும் பருத்தி துணி உற்பத்தி மூலம் மறைமுகமாகவும், நேரடியாகவும் லட்சக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. இதனால் பருத்தி உற்பத்தியை மத்திய, மாநில அரசுகளும் பல்வேறு வகையில் ஊக்குவிக்கின்றன. குறிப்பாக ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை திட்டத்தின் கீழ் பருத்தி பயிரிடப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் நீர் மற்றும் களை நிர்வாகம், பயிர் பாதுகாப்பு, ஊட்டச்சத்து முறைகள் விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

ஈரோடு மாவட்டத்தில் எம்.சி.யு. -5, 12, 13, சுரபி மற்றும் எஸ்.வி.பி.ஆர். -2 ஆகிய பருத்தி ரகங்கள் அதிகளவில் பயிரிடப்படுகிறது. கடந்த பத்தாண்டுகளுக்கு முன் பத்தாயிரம் ஹெக்டேரில் பருத்தி பயிரிடப்பட்டது. தற்போது 500 ஹெக்டேராக சுருங்கி விட்டது. மூன்று மாத பயிரான பருத்தியை பயிரிடும் விவசாயிகளும் பெருமளவில் குறைந்து விட்டனர்.

கோபி பகுதியில் சிறுவலூர், வெள்ளாங்கோயில், கொளப்பலூர், வேட்டைக்காரன்கோவில், அத்தாணி, கள்ளிப்பட்டி, துறையம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. சென்றாண்டு ஒரு கிலோ பஞ்சுக்கு 25 ரூபாய் வரை கிடைத்த்து, மழை மற்றும் உற்பத்தி குறைவால் நடப்பாண்டு ஒரு கிலோ பஞ்சுக்கு ரூ.30 வரை கிடைக்கிறது. கோபி பகுதியில குறைந்தளவில் பருத்தி பயிரிட்டிருந்தாலும் கூடுதல் விலை கிடைப்பதால்

பருத்தி விவசாயிகள் உற்சாகத்தில் உள்ளனர். பருத்தியுடன் ஆமணக்கு மற்றும் சென்டுமல்லி பயிர்களை விவசாயிகள் பயிரிட்டு வருவதால் கூடுதல் லாபம் கிடைக்கிறது.

## பட்டு வளர்ச்சி விழிப்புணர்வு முகாம்

First Published : 03 Feb 2010 04:13:20 AM IST

கிருஷ்ணகிரி, பிப்.2: கிருஷ்ணகிரி மாவட்டம், சாமாண்டப்பட்டி கிராமத்தில் பட்டுவளர்ச்சி குறித்த விழிப்புணர்வு முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

பட்டுவளர்ச்சி தொகுப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நடைபெற்ற விழிப்புணர்வு முகாமில் கிருஷ்ணகிரி மாவட்ட பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் கோலப்பா பிள்ளை, ஒசூர் மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி சமுத்திரவேலு, உதவி ஆய்வாளர் அ.மதிவாணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முகாமில் அரசின் நலத்திட்ட உதவிகள், பெண் விவ

சாயிகளுக்கான காப்பீடு திட்டங்கள், தோட்டங்களைப் பராமரித்தல், பட்டு முட்டையின் தரம், கருப்பு அட்டையின் பயன்பாடு, இளம்புழு வளர்ப்பு உள்ளிட்டவை குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

## மரபணு மாற்ற கத்திரிக்காய் அனுமதியில் அவசரம் ஏன்?

First Published : 04 Feb 2010 08:41:56 AM IST

உதகை, பிப். 3: மரபணு மாற்ற கத்திரிக்காயை அனுமதிப்பது தொடர்பான முழு அளவிலான ஆய்வுகள் முடிவடையாத நிலையில், அவற்றை அனுமதிக்க சில அமைச்சர்களும், அதிகாரிகளும் அவசரம் காட்டுவதாக குன்னூரில் நடைபெற்ற விவாத மேடையில் குற்றம் சாட்டப்பட்டது.

தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் குன்னூரிலுள்ள ஒய்எம்சிஏ அரங்கில் மரபணு மாற்ற கத்திரிக்காய் குறித்த விவாத மேடை நடத்தப்பட்டது. இதில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாநில துணைத்தலைவர் சுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். அப்போது அவர் பேசுகையில், கடந்த கால வரலாற்றை புரட்டி பார்க்கும்போது ஒரு புதிய தொழில்நுட்பம் வரும்போது அதை ஒரு சாரார் எதிர்ப்பது வழக்கமாகி வருகிறது. இருப்பினும் மரபணு மாற்ற உணவுப்பொருட்களை ஐரோப்பிய நாடுகள் தங்கள் நாட்டில் பயிர் செய்யவும், விற்பனைக்கும் தடை விதித்துள்ளன. அதைப்போலவே மரபணு மாற்ற கத்திரிக்காயை இந்தியாவில் பயிரிட அனுமதிக்கக்கூடாது என்றார்.

குன்னூர் பாஸ்டியர் ஆய்வக உதவி இயக்குநர் டாக்டர் வெங்கட்ரமணா பேசுகையில், மரபணு மாற்ற கத்திரிக்காயை பொறுத்தமட்டில் அரைகுறை ஆராய்ச்சிகள் மட்டும் செய்யப்பட்டுள்ளன. பன்னாட்டு நிறுவனங்களின் வியாபார நோக்கத்திற்காக அவசர கதியில் இந்தியாவில் அவற்றை அறிமுகப்படுத்த முயற்சிகள் நடைபெறுகின்றன. இதை மக்கள் எதிர்க்க வேண்டுமென்றார்.

பாஸ்டியர் ஆய்வக இளம் விஞ்ஞானி டாக்டர் சிவானந்தா பேசுகையில், கத்திரிக்காயின் மரபணுவுடன் பாசில்லஸ் துரங்கசீயஸ் என்ற மண்ணிலுள்ள பாக்டீரியாவின் மரபணுவை இணைத்து பி.டி. கத்திரிக்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. கத்திரிக்காயில் உண்டாகும் பூச்சிகளை கொல்லும் ஆற்றல் கொண்ட ஒருவித விஷப்பொருளை உள்ளடக்கிய புரதத்தை உற்பத்தி செய்யும் இந்த பாக்டீரியா, கத்திரிக்காயை உண்ணும் மனித உடலிலும் எத்தகைய மாற்றங்களை உருவாக்கும் என்பதைக் குறித்த சரியான தகவல்கள் இல்லை என்றார்.

குன்னூர் பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி பேராசிரியை டாக்டர் சுஜாதா பேசுகையில், நம் நாட்டிலுள்ள 250க்கும் மேற்பட்ட கத்திரிக்காய் இனங்கள், இந்த பி.டி. கத்திரிக்காயால் முற்றிலும் அழியுமெனவும், சுவையற்ற இந்த உணவுப்பொருளை நாம் அனுமதிக்கக்கூடாது எனவும் குறிப்பிட்டார்.

அறிவியல் இயக்க நீலகிரி மாவட்ட செயலர் ராஜூ பேசுகையில், பி.டி.கத்திரிக்காயை அனுமதிப்பது குறித்து முடிவெடுக்க மத்திய அரசு 30 விஞ்ஞானிகள் கொண்ட குழுவை அமைத்துள்ளது. உச்சநீதிமன்றமும் உஷா பார்கவா என்ற விஞ்ஞானியை பார்வையாளராக நியமித்துள்ளது. பி.டி. கத்திரிக்காயை அனுமதிக்கும் முன்னர் 30 விதமான சோதனைகள் செய்யப்பட வேண்டும். ஆனால், இதுவரை 12 விதமான சோதனைகள் மட்டுமே நடத்தப்பட்டுள்ளன. அதற்குள் சில மத்திய அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பி.டி.கத்திரிக்காயை உடனடியாக அனுமதிக்க வேண்டுமென வற்புறுத்துகின்றனர். பன்னாட்டு நிறுவனங்கள் இந்திய மக்களின் நல்வாழ்வை வியாபாராமாக்கி பணம் சம்பாதிப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

குன்னூர் நுகர்வோர் பாதுகாப்பு சங்க தலைவர் மனோகரன் பேசுகையில், இதுபோன்ற விஷப் பொருட்களை சோதித்து பார்க்க இந்திய மக்கள் எலிகள் அல்ல எனவும், இந்தியா பிற நாடுகளின் குப்பைத் தொட்டியாக மாறி வருவதாகவும் குறிப்பிட்டார்.

பாஸ்டியர் ஆய்வக ஆராய்ச்சியாளர் ஜெகந்நாதன் பேசுகையில், இந்தியாவிலுள்ள குழந்தைகளில் 46 சதத்தினர் ஊட்டச்சத்து குறைந்தவர்களாக உள்ளதாக ஐ.நா. சபை அறிவித்துள்ளது. இதற்கு காரணம் நமது நாட்டில் ஊட்டச்சத்து மிக்க பொருட்கள் போதுமான அளவிற்கு இருந்தாலும் அதை வாங்கி உண்ணும் ஆற்றல் நமது மக்களில் பாதி பேருக்கு இல்லை எனவும் குறிப்பிட்டார்.

அறிவியல் இயக்க நீலகிரி மாவட்ட தலைவர் பெள்ளி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், தேசிய பசுமைப்படை திட்ட ஒருங்கிணைப்பாளர் லட்சுமிநாராயணன், அருவங்காடு கிராமிய அபிவிருத்து இயக்க கள நிர்வாகிகள், குன்னூர் பழங்குடியினர் மற்றும் மேம்பாட்டு அறக்கட்டளை அமைப்பினர் ஆகியோருடன் பொதுநல அமைப்பினரும், கல்லூரி மாணவியரும் திரளாக பங்கேற்று தங்கள் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.

### சர்வதேச சதுப்பு நில பாதுகாப்பு தினம்

First Published : 03 Feb 2010 11:13:19 AM IST

உதகை, பிப். 2: உதகை நகர மக்கள் விழிப்புணர்வு சங்கத்தின் சார்பில் சர்வதேச சதுப்பு நில பாதுகாப்பு தினம் உதகையில் அனுசரிக்கப்பட்டது.

இதையொட்டி உதகையிலுள்ள மரவியல் பூங்காவில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் சதுப்பு நில பாதுகாப்பு உறுதிமொழியை பள்ளி மாணவ, மாணவியர் ஏற்றனர். தொடர்ந்து உதகை நகர மக்கள் விழிப்புணர்வு சங்க செயலர் ஜனார்த்தனன் பேசியதாவது:

நீலகிரி மாவட்டம் ஆங்கிலேயர் வருகைக்கு முன்னர் இயற்கை எழில் கொஞ்சும் சதுப்பு நிலங்கள் நிறைந்த பகுதியாக மாறியது. நீலகிரியை கண்டறிந்த ஜான் சலிவன் கோவையிலிருந்து இங்கு வந்தவுடன் சேரிங்கிராஸ் வரை பரவியிருந்த உதகை ஏரியை மரங்களை வெட்டி புதிய நகரையும் உருவாக்கினார். ஆனால் அப்போது பயிரிடப்பட்ட யூகலிப்டஸ் மரங்களால் நீராதாரங்கள் வற்றி விட்டன. எனவே தற்போதுள்ள சதுப்பு நிலங்களை பாதுகாப்பது நமது கடமையாகும் என குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியில் கூடலூர் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய தலைவர் சிவசுப்பிரமணியன் பேசுகையில், சதுப்பு நிலங்களின் அருமையை உணராததன் காரணமாக கட்டடங்களும், ஆக்கிரமிப்புகளும்

அதிகரித்து தற்போது சுற்றுச்சூழலே மாறியுள்ளது. கூடலூாரில் பல்வேறு சதுப்பு நிலங்கள் அழிக்கப்பட்டதன் விளைவாகவே காலநிலை மாற்றமும் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

சிஎஸ்ஐ மெட்ரிகுலேஷன் பள்ளி முதல்வர் ஆஷா ஜெயபால், சதுப்பு நில மேலாண்மை குறித்து விவரித்தார்.

### மானியத்தில் காய்கறி விதைகள், பழக்கன்றுகள் விநியோகம்

First Published : 04 Feb 2010 01:02:35 AM IST

பண்ருட்டி, பிப். 3: கெடிலம் ஆற்றுப் பாசன பகுதியில் உள்ள வருவாய் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு நீர், நிலவளத் திட்டத்தின் மூலம் மானியத்தில் காய்கறி விதைகள் மற்றும் பழக்கன்றுகள் வழங்கப்படுவதாக பண்ருட்டி தோட்டக்கலை உதவி இயக்குநர் வி.ராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

÷அவர் விடுத்துள்ள செய்தி குறிப்பில், கடலூர் மாவட்டம் பண்ருட்டி வட்டாரத்தில் உலக வங்கி நிதி உதவியுடன் கெடிலம் நதி மேம்பாடு நீர், நிலவளத் திட்டம் நடப்பு நிதியாண்டில் செயல்பட உள்ளது.

÷தோட்டக்கலைத் துறை மூலம் கெடிலம் ஆற்றுப் பாசன பகுதியில் உள்ள வருவாய் கிராம விவசாயிகளுக்கு திசு வளர்ப்பு வாழை, கொய்யா, கத்தரி, வெண்டை விதைகள் மற்றும் தேவையான இடுபொருள்கள் மானிய விலையில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

÷இத் திட்டத்தில் மனம்தவிழ்ந்தபுத்தூர், நத்தம், சிறுகிராமம், வீரப்பார், திருவாமூர், எலந்தம்பட்டு, செம்மேடு, சேமக்கோட்டை, மணப்பாக்கம், சிறுவத்தூர், எல்.என்.புரம், பூங்குணம் மற்றும் செட்டிப்பட்டரை பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் சேர்ந்து பயனடையலாம்.

÷பயன்பெறும் விவசாயிகள் 10 நாள்களுக்குள் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்களை தொடர்பு கொண்டு தங்களது நில புலஎண் நீர், நிலவள பாசன பகுதிக்குள் வருகிறதா என்பதை உறுதி செய்து கொண்டு, பண்ருட்டி தோட்டக்கலை உதவி அலுவலர்கள் மற்றும் உதவி இயக்குநரை தொடர்பு கொண்டு பதிவு செய்துக் கொள்ள வேண்டும் என வி.ராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

### வேதாரண்யம் பகுதியில் தோட்டக் கலை துணை இயக்குநர் ஆய்வு

First Published : 03 Feb 2010 10:06:00 AM IST

வேதாரண்யம், பிப். 2: நாகை மாவட்டம், வேதாரண்யம், தலைஞாயிறு பகுதிகளில் தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் பொறுப்பு வகிக்கும் கோ. கணேசன் செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

கோவில்பத்து, வெள்ளப்பள்ளம், நாலுவேதபதி, வானவன்மாதேவி, தேத்தாகுடி,புஷ்பவனம் உள்ளிட்ட கிராமங்களில் கார்த்திகை கிழங்கு உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்களை துணை இயக்குநர் ஆய்வு செய்தார்.

அத்துடன் ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 50 சத மானியத்தில் அளிக்கப்பட்டு சாகுபடி செய்யப்பட்டுள்ள பழக்கன்று, காய்கறி பயிர்களை பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கினார். புஷ்பவனம் பகுதியில் உள்ள முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலையில் அவர் ஆய்வு செய்தார்.

ஆய்வின்போது, தோட்டக்கலைத் துறை உதவி அலவலர்கள் என். சிவராமகிருஷ்ணன், ஆர். ஞானசேகரன், ஆர். கார்த்திகேயன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**வேதாரண்யம் அருகே உழவர் மன்றம் தொடக்கம்**

First Published : 03 Feb 2010 10:05:30 AM IST

வேதாரண்யம், பிப். 2: நாகை மாவட்டம், வேதாரண்யம் அருகேயுள்ள குரவப்புலம் கிராமத்தில் உழவர் மன்றத் தொடக்க விழா அண்மையில் நடைபெற்றது.

குரவப்புலம் ஊராட்சி அலுவலக வளாகத்தில் நடைபெற்ற விழாவுக்கு ஊராட்சித் தலைவர் விஜயலட்சுமி தமிழன்பன் தலைமை வகித்தார்.

ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் மா. ஜெயக்குமார், ஊராட்சி துணைத் தலைவர் மீனாட்சிசுந்தரி அசோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் கே. வேணுகோபால் பெயர்ப் பலகையை திறந்து வைத்தார். சிக்கல் அறிவியல் வேளாண் மைய தலைவர் பேராசிரியர் கே.சி. கௌதமன் சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் வேதாரண்யம் வேளாண் உதவி இயக்குநர் (பொ) பி. மணிகண்டன், தோட்டக்கலைத் துறை உதவி வேளாண் அலுவலர் என். சிவராமகிருஷ்ணன், கால்நடை உதவி மருத்துவர் வி. மஞ்சுளா, அன்னபூரணா கல்வி அறக்கட்டளை இயக்குநர் டி. முருகையன், தமிழாசிரியர் நாக. சௌந்தரராசன், கிராம நிர்வாக அலுவலர் எம். காந்திராஜன், உழவர் மன்ற நிர்வாகிகள் எஸ். பாண்டியன், டி. சிங்காரவேல், ஜி. ஆசைத்தம்பி, ஆர். பாண்டித்துரை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**வளம் தரும் கம்மல் பாசி**

ஜி.சுந்தரராஜன்

First Published : 04 Feb 2010 12:00:00 AM IST



**முன்னோடி விவசாயி வீட்டுத் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கம்மல் பாசி வளர்ப்புத் தொட்டி**

சிதம்பரம், பிப். 3: சில ஆண்டுகளாக பெருகி வரும் வேளாண் உற்பத்தி செலவுகள், விவசாய முதலீடுகள், இயற்கைச் சீற்றங்கள் மற்றும் சந்தை பிரச்னைகள் ஆகியவற்றை விவசாயிகள் சந்திக்க நேரிடுகிறது.

விவசாயிகள் குறைந்த செலவில் அதிக லாபம் தரும் எளிய வேளாண் தொழில்நுட்பங்களை நோக்கி தங்கள் கவனத்தை திருப்பவும், தங்களின் வயல்களில், தோட்டங்களில் எளிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பார்க்கும் ஆர்வம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் குறைந்த செலவில் விவசாயிகள் வீட்டுத் தோட்டங்களில் எளிதாக உருவாக்கி அதிகளவில் பயன்படுத்தப்படும் "கம்மல் பாசி' என்றழைக்கப்படும் அசோலா பயன்பாடு பற்றி தமிழக விவசாயிகள் தெரிந்து கொள்வது அவசியம் என அண்ணாமலைப் பல்கலைக் கழக வேளாண் விரிவாக்கத்துறை விரிவுரையாளர் தி.ராஜ்பிரவீன் தெரிவித்துள்ளார்.

தயாரிப்பு முறைகள்: உலகின் மிகத் தொன்மையான உயிரினங்களில் பெரணி வகையைச் சேர்ந்த "அசோலா' என்றழைக்கப்படும் கம்மல் பாசி. பார்ப்பதற்கு கம்மல் போல் இருப்பதால் கிராமத்தில் விவசாயிகள் குறிப்பாக மகளிர் இவ்வாறு செல்லமாக அழைக்கின்றனர்.

கம்மல் பாசியில் உள்ள "அனபீனா அசோலா' என்ற பாக்டீரியாக்கள் காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து பயிர்களுக்கு தரும் சிறப்பு பெற்றது.

விவசாயிகள் தங்கள் வயல்கள், தோட்டங்கள், வீடுகளில் கம்மல் பாசி தயாரிக்க ஒரு தொட்டியில் அல்லது குழியின் மேல் பாலிதீன்ஷீட் அல்லது தார்பாய் அமைத்து செங்கல்களை (படத்தில் உள்ளது போல்) நன்றாக அடுக்கிக் கொள்ள வேண்டும்.

பின்னர் தொட்டியில் தேவைக்கேற்ப தண்ணீரை நிரப்பி ஒரு கிலோ சாணம், பாறைத்தூள் ஒரு கைப்பிடி, அசோலா விதைகள் ஒரு கைப்பிடி போட்டு நன்றாக கலக்கிவிடவும்.

அடுத்த ஒரு வாரத்தில் 10 மடங்கு அளவுக்கு "அசோலா' பெருகிவிடும். மீண்டும் அசோலா வேண்டும் என்றால் சாணம் மற்றும் பாறைத்தூள் மட்டும் தொட்டியில் போட்டால் போதும் மேலும் பெருக தொடங்கிவிடும்.

இவ்வாறு தயாரிக்கப்படும் அசோலாவை நெல் வயலுக்கு இட்டு விவசாயிகள் எளிதாக அதிக மகசூல் பெற முடியும். வயலில் இரண்டாம் களை எடுக்கும் போது அசோலாவை வயலில் வைத்து மிதித்து விட வேண்டும். சூரிய ஒளிபடும் பகுதியில்தான் இந்த வேளாண் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். தழைச்சத்து, மணிச்சத்து மற்றும் சாம்பல்சத்து என முக்கியமான சத்துகள் ஒருங்கே கொண்ட தாவரமாக "கம்மல் பாசி' உள்ளதால் விவசாயிகள் குறைந்த செலவில் இயற்கை முறையில் அதிக லாபம் பெற முடியும்.

பிற பயன்கள்: கம்மல் பாசியை கறவை மாடுகளுக்கு கொடுத்தால் அதிகபட்சமாக 2 லிட்டர் வரை பால் கிடைப்பதாக அதை பயன்படுத்தும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். மேலும் தீவனச் செலவுகள் 25 சதவீதம் வரை குறைவதாகவும் கூறுகின்றனர். கோழிகள் கம்மல் பாசியை உண்டு அதிக முட்டைகளை தருவதாகவும், மீன்கள் வேகமாக வளர்வதாகவும் பண்ணை மகளிர் தெரிவிக்கின்றனர்.

கம்மல் பாசி வளர்க்கப்படும் நிலங்களில் கொசுக்கள் வராது என்பதால் கொசுக்களை அழிக்க கம்மல் பாசியை விவசாயிகள் வளர்த்து பயன் பெறலாம்.

எனவே தமிழக விவசாயிகள் குறைந்த செலவில் அதிக லாபம் மற்றும் மகசூல் பெறவும், கால்நடைகளுக்கு நல்ல தீவனமாகவும் பயன்படும் கம்மல் பாசி சாகுபடியில் ஈடுபடலாம் என விரிவுரையாளர் தி.ராஜ்பிரவீன் தெரிவித்துள்ளார்.

## செம்மை நெல் சாகுபடி தீவிரம்

கோ. சந்தானகிருஷ்ணன்

First Published : 04 Feb 2010 12:00:00 AM IST



**உத்தரமேரூர் வட்டம், பினாயூர் கிராமத்தில் உள்ள வயலில் நெற்பயிர்களுக்கு இடையே ஜோனோவிடர் கருவி மூலம் களையெடுக்கிறார் விவசாயி**

உத்தரமேரூர்,பிப். 3: உத்தரமேரூர் வட்டாரத்தில் செம்மை நெல் சாகுபடி விவசாயிகளிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

பெரும்பாலான கிராம விவசாயிகள் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள நெல் சாகுபடியில் போதுமான லாபம் கிடைக்காத நிலையில் இருந்து வந்தனர். இந்நிலையில், வேளாண் துறை அறிமுகப்படுத்தியுள்ள செம்மை நெல் சாகுபடி முறை திட்டம் அம்மையப்பநல்லூர், பென்னல்லூர், மருத்தவான்பாடி, மணித்தோட்டம், மருதம், குண்ணவாக்கம், களியாம்பூண்டி, கிளக்காடி, பினாயூர், கரும்பாக்கம், சீத்தனஞ்சேரி, சாத்தனஞ்சேரி, குறுமஞ்சேரி கிராம விவசாயிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இதுகுறித்து 3 ஆண்டுகளாக செம்மை நெல் சாகுபடி செய்து வரும் அம்மையப்பநல்லூர் கிராம முன்னோடி விவசாயி சுப்பையா கூறியது:

ஒரு ஏக்கர் நடவுக்கு 3 கிலோ விதை, ஒரு சென்ட் நாற்றங்கால் பரப்பு, குறைந்த தண்ணீர், 15 நாள் வயது நாற்று போதுமானது. நாற்றுகளை முக்கால் அடி இடைவெளியில், சதுர முறையில் நடவு செய்ய வேளாண் துறை வழங்கிய நடவு குறியிடும் மார்க்கர் கருவியால் நடவு செய்கிறேன். பிறகு குறைந்த அளவு தண்ணீர் நிறுத்தி காய்ச்சலும், பாய்ச்சலுமாக நீர் பாய்ச்சுகின்றேன்.

நடவு செய்த 15-ம் நாள் வரிசைகளின் இடையே வேளாண் துறை வழங்கிய கோனோ வீடர் களை மிதி கருவியால் களைச் செடிகளை நிலத்திலேயே உழுது விடுகிறேன். இதே போல் 10 நாள் இடைவெளியில் 3 முறை செய்கிறேன். இதனால் மண் வளம் பெருகி புதிய வேர்கள் விட்டு 40 முதல் 45 தூர்களும், கதிர்களும் கிடைக்கின்றன.

செம்மை நெல் சாகுபடியால் விதை, நாற்றங்கால் பராமரிப்பு, தண்ணீர் செலவு குறைகிறது. பூச்சிநோய் தாக்குதல், எலிவெட்டு குறைந்து பராமரிப்பு செலவு குறைகிறது.

இதனால், சாதாரண முறை நெல் சாகுபடியை விட இம்முறையில் ஏக்கருக்கு 9 முதல் 10 மூட்டைகள் வரை கூடுதல் மகசூலும் ரூ.7 ஆயிரம் முதல் ரூ.9 ஆயிரம் வரை கூடுதல் வருவாயும் கிடைக்கிறது என்றார்.

இதுபற்றி உத்தரமேரூர் உதவி வேளாண் இயக்குநர் ரங்கநாதன் கூறியது:


உத்தரமேரூர் வட்டாரத்தில் ஒருங்கிணைந்த உணவு தானிய உற்பத்தி திட்டத்தில் 150 ஹெக்டேரிலும், ஆத்மா திட்டத்தில் 6 தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில் 234 ஹெக்டேரிலும் செம்மை நெல் சாகுபடி செயல் விளக்க தளைகள் விவசாயிகளின் வயல்களில் அமைக்கப்பட்டு அரசு மானியம் வழங்கப்படுகிறது.

செயல்விளக்க தளைகளைப் பார்வையிடும் இதர விவசாயிகள் இத்தொழில்நுட்பத்தை கடைப்பிடித்து குறைந்த செலவில் அதிக மகசூலும, அதிக வருவாயும் பெறுகின்றனர் என்றார்.

### சொட்டு நீர்ப் பாசனத்தால்  இரு மடங்கு லாபம்

எஸ்.முகம்மது கவுஸ்

First Published : 04 Feb 2010 12:00:00 AM IST



**கடம்பத்தூர் ஒன்றியம், பிஞ்சிவாக்கம் கிராமத்தில் வயலில் அமைக்கப்பட்டுள்ள சொட்டுநீர்ப் பாசன முறை**

திருவள்ளூர், பிப். 3: காய்கறி மற்றும் தோட்டப் பயிர்களை சொட்டு நீர்ப் பாசன முறையில் பயிரிட்டால் விவசாயிகள் இரண்டு மடங்கு லாபம் பெறலாம் என தோட்டக் கலைத் துறை தெரிவித்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் தோட்டப் பயிர்கள் 12 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளன. இவற்றில் பழவகைகள் 9430 ஹெக்டேர் பரப்பளவிலும், காய்கறிகள் 1815 ஹெக்டேர் பரப்பளவிலும், மலர்கள் 764 ஹெக்டேர் பரப்பளவிலும் பயிரிடப்பட்டுள்ளன. இதில் 100 ஹெக்டேர் தோட்டப் பயிர் மட்டுமே திருவள்ளூர் மாவட்டத்தில் சொட்டு நீர்ப் பாசன முறையில் பயிரிடப்பட்டுள்ளன.

உதாரணமாக, சாதாரண முறையில் கத்தரிக்காய் பயிரிட்டால் ஒரு ஹெக்டேருக்கு 200 கிராம் விதை போட வேண்டும், இதன் பருவகாலம் 150 நாள்கள். இதில் 200 கிலோ தழைச் சத்து, 150 கிலோ மணிச்சத்து, 100 கிலோ சாம்பல் ஆகியவற்றை உரமாக இட வேண்டும். சாதாரண முறையில் பயிரிடும்போது அதன் சாகுபடி செலவு ரூ.28 ஆயிரம் வரை இருக்கும்.

மேலும், சாதாரண முறையில் அதிகளவில் வேரழுகள் நோய் தாக்கும் அபாயம் உள்ளது. இதையெல்லாம் கடந்த வந்து அறுவடை செய்தால் ஒரு ஹெக்டேருக்கு ரூ.2 லட்சத்து 42 ஆயிரம் வரை மட்டுமே லாபம் ஈட்ட முடியும்.

அதே வேளையில், சொட்டு நீர்ப் பாசன முறையில் கத்தரிக்காய் பயிரிட்டால், அதற்கு 200 கிராம் விதை போட வேண்டும். பருவ காலம் 150 நாள்கள்.

இதற்கு நீரில் கரையும் உரங்களான 19:19:19: 79 கிலோ, 13:0:45 189 கிலோ, 12: 61: 0: 37 கிலோ ஆகிய உரங்கள் இட வேண்டும். சொட்டு நீர்ப் பாசனம் மூலம் உரங்கள் இடுவதால் பரவலாக அனைத்துப் பகுதிகளுக்கும் நீர் மற்றும் உரங்கள் சீராக பரவும். அதன் மூலம் இத்திட்டம் மூலம் பயிரிடும் நிலங்களில் வேர் அழுகல் நோய் தாக்குவது குறைவு.

சொட்டு நீர்ப் பாசன முறையில் பயிரிடும் போது அதன் சாகுபடி செலவு ரூ.64 ஆயிரமாக இருந்தாலும் அதிக மகசூலுடன் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 4 லட்சம் வரை லாபம் ஈட்ட முடியும். இது சாதாரண முறையை விட ஏறக்குறைய இரண்டு மடங்கு லாபம் அதிகம் கிடைக்கும்.

பொதுவாக எந்த முறையில் பயிரிட்டாலும் தோட்டப் பயிர் விவசாயிகளாக தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டம் மூலம் ரூ.15 ஆயிரம் மதிப்பிலான உரங்கள் வழங்கப்படுவதுடன் ரூ.11,200 மானியத்துடன் கூடிய கடனுதவி ரூ.37,440 வழங்கப்படுகிறது.

மேலும், தற்போதைய பிப்ரவரி மாதத்தில் பயிரிடப்படும் அனைத்தும் நல்ல மகசூலை தரும். பயிரிட இது ஏற்ற பருவமாகவும் உள்ளது என தோட்ட கலைத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## வேளாண் துறைக்கு தனி பட்ஜெட்: தமிழ்நாடு கள் இயக்கம் கோரிக்கை

First Published : 04 Feb 2010 08:36:26 AM IST

கோவை, பிப்.3: வேளாண்துறைக்கு தனி பட்ஜெட் தாக்கல் செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு கள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த அமைப்பின் ஆலோசனைக் கூட்டம் கோவையில் புதன்கிழமை நடைபெற்றது. தமிழ்நாடு மனித உரிமை பாதுகாப்புக் குழு தலைவர் டி.ஏ.அய்யாசாமி தலைமை வகித்தார்.

வழக்கறிஞர் திருஞானசம்பந்தம், கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் செ.நல்லசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

தமிழகத்தில் கள் இறக்க அனுமதி வழங்க வேண்டும்.மதுபிரியர்களிடம் கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பிப்.15}ம் தேதி முதல் முக்கிய நகரங்களில் விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்படும்.

பாம்பாற்றின் குறுக்கே கேரள அரசு அணை கட்டுவதை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மரபணு மாற்றப்பட்ட விதைகளையும், மலட்டு விதைகளையும் மத்திய அரசு ஒட்டுமொத்தமாக தடை செய்ய வேண்டும்.

கள் இறக்குவோர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்வதை நிறுத்த வேண்டும்.

இந்தியா விவசாய நாடு. இங்கு 60 சதவீதம் பேர் விவசாயத்தை நம்பியுள்ளனர்.

எனவே, மத்திய, மாநில அரசுகள் வேளாண் துறைக்கு தனி பட்ஜெட் தாக்கல் செய்ய வேண்டும்.

## மாட்டுத்தாவணி சென்ட்ரல் காய்கறி மார்க்கெட் கட்டுமானப் பணி இம்மாத இறுதியில் முடிவுறும்

First Published : 03 Feb 2010 12:27:35 PM IST

மதுரை, பிப்.2: மாட்டுத்தாவணியில் சென்ட்ரல் காய்கறி மார்க்கெட் கட்டுமானப் பணி இம்மாத இறுதியில் முடிவடையும் என்று மாநகராட்சி ஆணையர் எஸ்.செபாஸ்டின் தெரிவித்தார்.

மதுரை மாநகராட்சி வடக்கு மண்லடத்திற்குட்பட்ட 1 முதல் 21 வரையிலான வார்டுகளின் பொதுமக்கள் குறைதீர்க்கும் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மேயர் ஜி.தேன்மொழி தலைமை வகித்தார். இதில் ஆணையர் எஸ்.செபாஸ்டின் பேசியதாவது:

மாட்டுத்தாவணி பகுதியில் அமைக்கப்பட்டு வரும் மத்திய காய்கறி அங்காடிகள் கட்டுமானப் பணிகள் இம்மாத இறுதிக்குள் முடிவடையும். இதில் சாலை, குடிநீர், பாதாள சாக்கடை உள்பட அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

மத்திய அமைச்சர் மு.க.அழகிரியின் முயற்சி காரணமாக மாநகராட்சிப் பகுதிகளில் 11 இடங்களில் கட்டப்பட்டுள்ள நவீன கழிப்பறைகள் பொதுமக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. இந்த கழிப்பறைகள் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மதுரையில் குடிசையில்லா நகரமாக்கும் பொருட்டு, மத்திய மற்றும் மாநில அரசுகள் 22 ஆயிரம் வீடுகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்து, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதேபோல், ரயில் வழித்தடங்களின் அருகே பட்டா இல்லாத மற்றும் புறம்போக்கு இடங்களில் உள்ள குடிசைவாசிகளுக்கு மாற்று இடம் வழங்க மாநகராட்சி தயார் நிலையில் உள்ளது. 100}க்கும் மேற்பட்ட குடிசைவாசிகள் ஒன்றாக வந்தால், மாற்று இடம் வழங்கப்படும்.

2009}10}ம் ஆண்டில் மாநகராட்சி வரி இனங்களில் 40 சதவீதம் வரை நிலுவையாக உள்ளது. இன்னும் இரு மாதங்களே உள்ள நிலையில் பொதுமக்கள் வரி நிலுவைகளை உடனே செலுத்தி, மாநகராட்சி வளர்ச்சிப் பணிக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

இதில், பொதுமக்கள் சார்பாக 20}க்கும் மேற்பட்ட மனுக்கள் மேயரிடம் வழங்கப்பட்டது. மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மேயர் உத்தரவிட்டார்.

நிகழ்ச்சியில், நகர் நல அலுவலர் சுப்பிரமணியன், உதவி ஆணையர் (வடக்கு) எஸ்.பி.ராஜகாந்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**நீர்வரத்துக் கால்வாய் தடைகளை அகற்ற உத்தரவு**

First Published : 04 Feb 2010 08:39:24 AM IST

நாமக்கல், பிப். 3: நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் நீர்வரத்துக் கால்வாய்களில் உள்ள தடைகளை அகற்ற வேண்டும் என, வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு ஆட்சியர் சகாயம் உத்தரவிட்டுள்ளார்.

நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் அண்ணா மறுமலர்ச்சி திட்டம், தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பணிகளை புதன்கிழமை ஆய்வு செய்தார்.

ஒருவந்தூர் ஊராட்சியில் நடைபெறும் குளம் அமைத்தல், நூலகம் கட்டுதல், மயானம் கட்டுதல் உள்ளிட்ட ரூ. 20 லட்ம் மதிப்பில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகளையும், தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் நடைபெறும் வாய்க்கால் தூர்வாரும் பணியையும் பார்வையிட்டார்.

அப்போது, மயான மேம்பாடு செய்ப்பட்டிருந்த பகுதி அருகே நீர்வரத்துக் கால்வாய் தடைபட்டிருப்பதைப் பார்த்து, வட்டார வளர்ச்சி அலுவலர்களை அழைத்து விசாரணை நடத்தினார். உடனடியாக, கால்வாய் தடையை அகற்ற உத்தரவிட்டார். மாவட்டத்தில் நாளுக்கு, நாள் மழை அளவு குறைந்து வரும் சூழலில் நீராதாரங்களை மேம்படுத்த 15 ஒன்றியங்களைச் சேர்ந்த வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் நீர்வரத்துக் கால்வாய்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதா, தடைகள் உள்ளதா என்பதை கண்டறிந்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

ஏரி, குளங்களுக்கான தண்ணீர் வரத்து பாதையை கண்டறிந்து அவற்றை தூர்வாரவும் ஆலோசனை கூறினார்.

பின்னர், அரசநத்தம் மற்றும் தொட்டிப்பட்டி கிராமங்களில் நடைபெறும் தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பணிகளை பார்வையிட்டு பணியில் ஈடுபட்டுள்ள பெண்களிடம் கூலி முறையாக வழங்கப்படுகிறதா எனக் கேட்டறிந்தார். ஒருவந்தூர் புதூர் நியாய விலைக் கடை, செல்லிபாளையம் அரசு துவக்கப் பள்ளி ஆகியவற்றையும் ஆய்வு செய்தார்.

ஆய்வின்போது, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தெய்வசிகாமணி, மரகதம் மற்றும் பொறியாளர்கள் உடனிருந்தனர்.

**விவசாயிகளுக்கு பண்ணை இயந்திர மயமாக்கல் பயிற்சி**

First Published : 03 Feb 2010 09:14:00 AM IST

பெரம்பலூர், பிப். 2: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளுக்கு பண்ணை இயந்திர மயமாக்கல் பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சியர் எம். விஜயகுமார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர், செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு பண்ணை இயந்திர மயமாக்கல் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பிப்ரவரி இரண்டாவது வாரம் முதல் நடைபெறும் இப் பயிற்சி, பெரம்பலூர் மாவட்டத்தில் இரண்டு வாரம் நடைபெறுகிறது.

பவர் டில்லர் இயக்குதல், பராமரித்தல் மற்றும் மேலாண்மை பயிற்சி, நடவு இயந்திரம், களை எடுக்கும் கருவி, கதிரடிக்கும் கருவி, அறுவடை இயந்திரக் கருவிகள் உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளது. இந்தப் பயிற்சியில் கலந்து கொள்ள 18 வயது முதல் 40 வயது வரை உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பயிற்சியில் கலந்து கொள்ளும் விவசாயிகளுக்கு அரசு விதிமுறைகளின் படி, பயிற்சி முடிவின்போது உதவித் தொகை, சான்றிதழ் வழங்கப்படும். பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், உதவி செயற் பொறியாளர், 158 புதுக் காலனி, வடக்குத் தெரு, துறைமங்கலம், பெரம்பலூர் என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தை தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம் என்றார் அவர்.

**இலவச கால்நடை மருத்துவ முகாம்**

First Published : 04 Feb 2010 03:02:52 AM IST

வாலாஜாபேட்டை, பிப்.3: ராணிப்பேட்டை காரை 18-வார்டில் கால்நடைகளுக்கான இலவச மருத்துவமுகாம் செவ்வாய்க்கிழமை நடந்தது.

நகரமன்ற உறுப்பினர் சந்தோஷம் தலைமை தாங்கினார். ராணிப்பேட்டை கால்நடை மருத்துவமனை மருத்துவர் பன்னீர்செல்வம் தலைமையில் 750 கால்நடைகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டது. கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போடப்பட்டது.

முதுநிலை கால்நடை மேற்பார்வையாளர் சந்திரசேகரன், ஆய்வாளர்கள் ராஜேஸ்வரன், அன்புமணி, ராமச்சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**சின்ன வெங்காயம் விலை கடும் வீழ்ச்சி: ஏற்றுமதி தடையால் உற்பத்தி தேக்கம்**

பிப்ரவரி 04,2010,01:50



உடுமலை: உள்ளூர் சந்தைகளுக்கு சின்ன வெங்காயம் அனுப்பப்படுவதால் விலையில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. உடுமலை, பல்லடம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் சின்ன வெங்காயம் உற்பத்தி செய்யப் பட்டு பிற மாவட்டங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. உள்ளூரில் உற்பத்தி பாதிக்கப்பட்டதால் ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா மாநிலங்களிலிருந்து சின்ன வெங்காயம் கொண்டு வரப்படுகிறது. கடந்த நவம்பர் சீசனில், உடுமலை பகுதியில் சாகுபடி பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்டது. இதனால், உள்ளூர் சந்தைக்கு வரத்து குறைந்து தட்டுப்பாடு அதிகரித்தது.

பலத்த மழை காரணமாக ஆந்திரா போன்ற பிற மாநிலங்களில் இருந்தும் வரத்து முற்றிலுமாக தடைபட்டது. இதனால், சின்னவெங்காயத்தின் விலை கிடு கிடுவென உயர்ந்தது. கடந்த டிசம்பரில் ஒரு கிலோ வெங்காயத்தின் விலை 25 ரூபாயிலிருந்து 30 ரூபாய் வரை விற்கப்பட்டது. வரத்து சீராகாத நிலையில், சில மாதங்களாக சின்ன வெங்காயத்தின் விலை குறையவே இல்லை. இதனால், நல்ல விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் மாநிலம் முழுவதும் விவசாயிகள் ஆர்வத்துடன் சின்ன வெங்காயம் பயிரிட்டனர். ஆனால், ஒரு மாதமாக அறுவடைப் பணிகள் நடக்கும் நிலையில் விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. கொள்முதல் விலை கிலோவிற்கு 10 ரூபாயிலிருந்து 15 ரூபாய் வரை மட்டுமே உள்ளது. இதனால், விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். சந்தைக்கு தொடர்ந்து வரத்து அதிகரித்து வருவதால் விலை அதிகரிக்கும் வாய்ப்பு குறைவாகவே உள்ளது. சில்லரை விற்பனையில் தரமான வெங்காயம் 10 முதல் 15 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

ஏற்றுமதி வியாபாரிகள் கூறியதாவது: இலங்கை மற்றும் மலேசியா ஆகிய நாடுகளுக்கு அதிகளவு சின்ன வெங்காயம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இலங்கையில் தேர்தல் போன்ற காரணங்களால் ஏற்றுமதி தடைபட்டது. மலேசியாவிற்கும் ஏற்றுமதி கடந்த ஒரு மாதமாக குறைவாகவே செல்கிறது. தற்போது, அறுவடைப் பணிகள் தீவிரமாக நடப்பதால் வரத்து பல மடங்கு அதிகரித்துள்ளது. ஏற்றுமதி குறைந்துள்ளதால் உற்பத்தியாகும் வெங்காயம் முழுவதும் உள்ளூர் சந்தைகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. இதனால், விலை

வீழ்ச்சியடைந்துள்ளது. வீரிய ரக விதை வெங்காயத்தை குறிப்பிட்ட நாட்களுக்கு மேல் இருப்பு வைக்க முடியாது என்பதால், அறுவடையின் போதே விவசாயிகள் விற்பனை செய்து வருகின்றனர். ஏற்றுமதி சீரானால், விவசாயிகளுக்கு கொள்முதல் விலையும், சில்லரை விற்பனையும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. இவ்வாறு வியாபாரிகள் தெரிவித்தனர்.

### மீன்பிடி மசோதா அறிமுகம் ஆகாது : எதிர்ப்புக்கு பணிந்தது மத்திய அரசு

பிப்ரவரி 04,2010,00:00 IST



"கடல் மீன்பிடி தொழில் ஒழுங்கு முறை மற்றும் மேலாண்மை சட்டத்தை கொண்டு வருவதற்கு, பல்வேறு தரப்பிலும் கடும் எதிர்ப்பு நிலவி வருவதை அரசாங்கம் புரிந்து கொண்டுள்ளது. எதிர்வரும் பட்ஜெட் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்பட மாட்டாது. எல்லா தரப்பு மக்களின் கருத்துக்களை கேட்ட பிறகே இறுதி முடிவெடுக்கப்படும்' என, மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு, பல புதிய கட்டுப்பாடுகளையும், விதிகளையும் விதித்து, புதிய சட்ட மசோதாவை கொண்டு வருவதில் மத்திய அரசு தீவிரமாக உள்ளது. கடல் மீன்பிடி தொழில் ஒழுங்கு முறை மற்றும் மேலாண்மை சட்டம் என்ற பெயரில் இதற்கான வரைவு மசோதாவை, மத்திய வேளாண் அமைச்சகம் தயாரித்து மத்திய அமைச்சரவைக்கு அனுப்பி வைத்தது. அங்கு ஒப்புதலும் பெறப்பட்டு விட்ட நிலையில், இதை சட்டமாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது, இந்த சட்ட மசோதாவுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. தமிழகத்தில் மீனவ அமைப்புகள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகள் என அனைத்து தரப்புமே, கடுமையாக கண்டனம் தெரிவிக்க ஆரம்பித்தன. காரணம், அந்த சட்டத்தின்படி குறிப்பிட்ட எல்லை வரை தான் கடலுக்குள் சென்று மீன் பிடிக்க வேண்டும். குறிப்பிட்ட பகுதியில் தான் மீன் பிடிக்க வேண்டும். குறிப்பிட்ட அளவுக்குத் தான் மீன் பிடிக்க வேண்டும். மீறினால், அபராதம், தண்டனை என, மீனவர்களின் உரிமைகளை பாதிக்கும் வகையில் ஷரத்துகள் இருந்தன. குறிப்பாக, தமிழத்தில் மிகப்பெரிய எதிர்ப்பு கிளம்பியது. போராட்டம், உண்ணாவிரதம் என, மீனவ சங்க பிரதிநிதிகள் தீவிரம் காட்டத் துவங்கியவுடன், மத்திய அரசு அழைத்து, அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியது. இந்நிலையில், மீண்டும் நேற்று இரண்டாவது கட்ட பேச்சு வார்த்தை நடைபெற்றது.

டில்லியில் உள்ள கிருஷி பவனில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில், நாடு முழுவதும் இருந்து, பல்வேறு மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அப்போது, அந்த பிரதிநிதிகள் மத்தியில் பேசிய அமைச்சர் சரத் பவார், "இந்த சட்ட மசோதாவுக்கு பெரும் எதிர்ப்பு கிளம்பியிருப்பது உண்மையே. மீனவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்க அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. வரும் பட்ஜெட் கூட்டத்தொடரில், இந்த மசோதாவை தாக்கல் செய்ய திட்டமிட்டிருந்தோம். ஆனால், இம்மசோதா குறித்து, இன்னும் நிறைய ஆராய வேண்டியிருக்கிறது. இதனால், வரும் பட்ஜெட் கூட்டத்தொடரில், இந்த மசோதா தாக்கல் செய்வதை நிறுத்தி வைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது விஷயமாக, மேலும் பல தரப்பினரிடமும் கருத்துக்களை கேட்டறிந்து, அதன் பின்னரே இறுதி முடிவெடுக்கப்படும்' என்று தெரிவித்தார்.

ஆலோசனை கூட்டத்தில், தமிழகத்திலிருந்து கலந்து கொண்ட தேசியவாத காங்கிரஸ் தலைவர் திண்டிவனம் ராமமூர்த்தி கூறியதாவது: லட்சக்கணக்கான தமிழக மீனவர்கள் இந்த மசோதாவை எதிர்க்கின்றனர். தங்களது உரிமைகள் பறிபோவது குறித்து அவர்கள் படும் கவலையில், நியாயம் உள்ளது. ஏற்கனவே, தமிழக மீனவர்கள் பல்வேறு வகையிலும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். 12 மைல் தூரத்தில் உள்ள இலங்கை கடல் எல்லைக்குள் செல்வதாகக் கூறி தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுவதும், தாக்கப்படுவதும் வாடிக்கையாக உள்ளது. கச்சத் தீவை திரும்ப பெற வேண்டுமென்ற கோரிக்கையும் தீவிரமாகிக் கொண்டு வருகிறது. இந்த சூழ்நிலையில், மீனவர்களின் நலன்களை காவு கொடுக்கும் வகையில், இதுபோன்ற மீன்பிடி மசோதாவை கொண்டு வருவது கண்டிக்கத்தக்கது. இந்த நடவடிக்கைகளை மத்திய அரசு முழுவதுமாக கைவிட வேண்டும். இவ்வாறு ராமமூர்த்தி கூறினார்.

- நமது டில்லி நிருபர் -

### மீன்கள் வரத்து அதிகரிப்பு : கடலூர் துறைமுகம் 'பிசி'

பிப்ரவரி 04,2010,00:00 IST

கடலூர் : மீன்கள் வரத்து அதிகரித்துள்ளதால் கடலூர் துறைமுகம் களை கட்டத் துவங்கியுள்ளது. மழை, புயல் சின்னம் காரணமாக நீரோட்டம் மாறியதால் ஜனவரி வரை மீன் வரத்து குறைவாக இருந்தது. மீனவர்கள் சிலர் மட்டுமே கடலுக்கு சென்று மீன்பிடித்து வந்தனர். கடலூர் துறைமுகம் களையிழந்து காணப்பட்டது. கேரளா, கர்நாடகா மாநிலங்களிலிருந்து மீன்களை கொண்டு வந்து விற்பனை செய்தனர். மீன் விலை இருமடங்காக உயர்ந்திருந்தது.
இந்நிலையில் கடலூர் மாவட்ட கடலோர பகுதியில் மீண்டும் மீன்கள் வரத்து அதிகரித்துள்ளதால் மீனவர்கள் அதிகளவில் கடலுக்குச் செல்ல துவங்கியுள்ளனர். கடலூர் மீன்பிடி துறைமுகத்தில் மீன்கள் வரத்து அதிகரித்துள்ளதால் மீன்பிடி துறைமுகம் மீண்டும் களை கட்டத் துவங்கியுள்ளது.

கானாங்கழுத்தை மீன் பெட்டி (70 கிலோ) 3,700 ரூபாய், கிளிச்சை மீன் 2,800 ரூபாய், கவலை மீன் 2,200 ரூபாய், கெளுத்தி மீன் கிலோ 26 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. இங்கு பிடிக்கப்பட்ட மீன்கள் கேரளா, சென்னை உட்பட பல பகுதிகளுக்கு நேற்று ஏற்றுமதி செய்யப்பட்டது.



# கொய்யா உற்பத்தி - ஏற்றுமதி அதிகரிப்பு

## வேளாண் பல்கலை துணைவேந்தர் தகவல்

கோவை, பிப். 4-

'இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு கொய்யா ஏற்றுமதி அதிகரித்துள்ளதால், அதன் உற்பத்தியில் மட்டுமல்லாமல், பதப்படுத்துதல், மதிப்பூட்டுதலில் விவசாயிகள் கவனம் செலுத்த வேண்டும்' என, வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி கூறினார்.

கொய்யா உற்பத்தி, விற்பனை பற்றிய தேசிய அளவிலான பயிற்சி, கோவை வேளாண் பல்கலையில் நடந்தது. துணைவேந்தர் முருகேசபூபதி பயிற்சியை துவக்கி வைத்து பேசியதாவது:

கொய்யா பழத்தில் ஏ,பி,சி, வைட்டமின் சத்துக்கள் அதிகளவில் உள்ளன. ஆரஞ்சுப் பழத்தை விட கொய்யாவில் அதிக வைட்டமின் 'சி' சத்து உள்ளது. இதை தவிர, இரும்பு, கால்சியம், பாஸ்பரஸ் சத்துக்களும் அதிகமாக உள்ளன.

கடந்த 20 ஆண்டுகளாக கொய்யா உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 1991ல் இரண்டு லட்சத்து 35 ஆயிரம் ஏக்கரில் பயிர் செய்யப்பட்ட கொய்யா, 2001ல் மூன்று லட்சத்து 87 ஆயிரத்து 500 ஏக்கராக உயர்ந்தது. இதனால் 11 லட்சம் டன்களாக இருந்த இதன் உற்பத்தி, 17 லட்சம் டன்களாக உயர்ந்தது.

இந்த ஆண்டு நான்கு லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டு, 18.5 லட்சம் டன் உற்பத்தி அதிகரித்துள்ளது. அமெரிக்கா, நெதர்லாந்து, மலேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கடந்த 2000-2001ம் ஆண்டு 172 லட்ச ரூபாய் மதிப்புள்ள 889 டன் கொய்யா மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டது. 2007-2008 ஆண்டுகளில் 2,495 டன் அளவில் 4.17 கோடி ரூபாய் மதிப்புள்ள கொய்யா ஏற்றுமதியாகியுள்ளது.

ஏற்றுமதி பெருகி வருவதால், அதற்கேற்ப உற்பத்தி, பதப்படுத்துதல், மதிப்பூட்டலில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு, துணைவேந்தர் பேசினார்.

பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி முதல்வர் பொன்னுசாமி, ஆராய்ச்சி இயக்குனர் பரமாத்மா, வேளாண் பொருளியல் துறைத் தலைவர் சந்திரசேகரன் பங்கேற்றனர். இப்பயிற்சி, இன்று நிறைவடைகிறது.

கொய்யா உற்பத்தி தொழில் நுட்பங்கள் குறித்த கருத்தரங்கு, கோவை வேளாண்பல்கலையில் நேற்று நடந்தது. இதில் துணைவேந்தர் முருகேசபூபதி, கொய்யா உற்பத்தி சங்க தலைவர் சகாதேவனுக்கு வேளாண் கருவிகளை வழங்கினார்.

தண்ணீர் இன்றி நெல் வயல்கள் வறண்டன: அறுவடை பருவத்தில் சாவியான சோகம்

பிப்ரவரி 04,2010,00:00 IST



மானாமதுரை: பருவம் தவறிய மழை, பாசனத்திற்கு வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படாததால், மானாமதுரை பகுதியில் நெல் வயல்கள் வறண்டு கிடக்கின்றன. இப்பகுதியில் 40 ஆயிரம் ஏக்கரில் சம்பா நெல் பயிரிடப்பட்டுள்ளது. கொந்தகை, மணலூர், திருப்புவனம், திருப்பாச்சேத்தி, பூவந்தி, பழையனூர், கட்டனூர் உட்பட 15 கிராமங்கள் வலது பிரதான கால்வாய் மூலம் பாசன வசதி பெறுகின்றன. இடைக்காட்டூர், பச்சேரி, வேம்பத்தூர், வேலூர், சிறுகுடி கிராமங்கள் இடது பிரதான கால்வாயில் பயன் பெறுகின்றன. மிளகனூர், கட்டிக்குளம், கீழப்பசலை, குறிச்சி, நெட்டூர், தெ.புதுக்கோட்டை கிராமங்கள் வலது பிரதான கால்வாயின் கடைமடை பகுதியில் உள்ளன. இப்பகுதி விவசாயம் வைகை அணை நீரை நம்பியே உள்ளது.

தண்ணீர் இல்லை: ஆண்டுதோறும் நவம்பர் இறுதியில், சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட பாசனத்திற்கு, அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும். இந்த ஆண்டு அணையில் போதிய தண்ணீர் இல்லாததால், இரண்டு

நாட்கள் மட்டுமே திறக்கப்பட்டது. வறண்ட நிலங்களில் வந்த குறைந்த அளவு தண்ணீர், கடைமடை பகுதிகளுக்கு போய் சேரவில்லை.

தாமதம்: கண்மாய்களிலும் குறைவான அளவே நீர் தேங்கியது. பருவம் தவறிய மழையால் இப்பகுதி விவசாயிகளும், உரிய காலத்தில் சாகுபடி செய்யவில்லை. வழக்கமாக அக்டோபரில் துவங்க வேண்டிய நடவு பணிகள், நவம்பரில் தான் துவங்கின. தற்போது இவை அறுவடையின் இறுதி கட்டத்தில் உள்ளன. பயிரை காப்பாற்ற அணையில் இருந்து நீர் திறக்க விவசாயிகள் வலியுறுத்தினர். ஆனால் தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால் பயிர் காய்ந்து, கருகும் அவலம் ஏற்பட்டுள்ளது. ராமநாதபுரம் மாவட்ட பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்ட நிலையில், சிவகங்கை மாவட்ட நிர்வாகம் இதற்கான முயற்சி எடுக்கவில்லை என விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து சிலரின் கருத்துக்கள்:

விவசாய சங்க தலைவர் ஆதிமூலம், திருப்புவனம்: இரு மாவட்டங்களுக்கான பங்கீட்டில், உரிய நீரை மாவட்ட நிர்வாகம் பெற்று தரவில்லை. இதனால் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள பயிர்கள் கருகி வருகின்றன. மாவட்ட பாசனத்திற்கு குறைந்த அளவு தான் திறக்கப்பட்டது. ஆற்றில் மணல் குவாரிகளை ஒட்டிய பகுதிகளை கடப்பதற்குள், இரு நாட்களில் தண்ணீர் நிறுத்தப்பட்டது. கண்மாய்களும் வறண்டு விட்டன. அணையில் நீர் திறக்க, மாவட்ட நிர்வாகம் முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவில்லை.

பாசன சங்க தலைவர் காசி, மேலநெட்டூர்: கடைமடை பாசனத்திற்கு, ஆண்டுதோறும் டிசம்பரில் ஏழு நாட்கள் தண்ணீர் திறக்க வேண்டும். ஆனால், ஜனவரியில் மூன்று நாட்கள் மட்டுமே திறந்தனர். மீண்டும் திறக்கப்படும் என எதிர்பார்த்து, கடன் வாங்கி விவசாயம் செய்தோம். தண்ணீர் திறக்கவில்லை. நெற்பயிர்கள் கருகி வருகிறது. இதற்கு இழப்பீடு வழங்க வேண்டும்.

விவசாய சங்க தலைவர் எம். ராமசந்திரன், தெ.புதுக் கோட்டை: கோ- 47, ஆடுதுறை ரக பயிரை 500 ஏக்கர் வரை நடவு செய்தோம். இதில் 370 ஏக்கரில் பயிர்கள் கருகிவிட்டன. பயிர்களை காப்பாற்ற, ஒரு மணி நேரத்திற்கு 15 ரூபாய் என விலைக்கு வாங்கி தண்ணீர் பாய்ச்சினோம். இதனால், 20 ஆயிரம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டது. வங்கி கடனை தள்ளுபடி செய்வதோடு, இழப்பீடு வழங்கவேண்டும்.

மாநில விவசாயிகள் சங்க தலைவர் தங்கமணி: இங்கு 40 ஆயிரம் ஏக்கரில் பயிர்கள் வாடுகின்றன. தண்ணீர் இல்லை என சொல்லும் அரசு, கடன் வாங்கி நடவு செய்த பயிருக்கு இழப்பீடு வழங்கவேண்டும். ஆண்டுக்கு ஏழு நாட்கள் தண்ணீர் திறக்கவேண்டும். இந்த நாட்களில் தண்ணீர் திறப்போம் என்ற உத்தரவாதத்தை, பொதுப்பணித்துறையினர் வழங்க வேண்டும்.

கலெக்டர் மகேசன் காசிராஜன் கூறியதாவது: அக்டோபர், டிசம்பரில் மழை குறைவால், நீர்வரத்து பாதிக்கப்பட்டது. அணையில் தற்போது 44.36 அடி தண்ணீர் மட்டுமே உள்ளது. அணையில் இருப்பில் உள்ள நீரை, திறக்க முயற்சி எடுக்கப் பட்டது. அப்படியே திறந்தாலும், ஆற்றுப்படுகை காய்ந்துள்ளதால், கடைமடை பகுதிகளுக்கு போய் சேராது.

**பயிர்களில் மிஞ்சும் பூச்சி மருந்தின் நஞ்சு அளக்க 4 'லேப்' : துணைவேந்தர்**

கோவை: ""பயிர்களில் மிஞ்சும் பூச்சி மருந்தின் நஞ்சை அளக்க, மண்டல வாரியாக நான்கு ஆய்வகங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது,'' என்று கோவை வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி கூறினார்.

இது பற்றி முருகேச பூபதி கூறியதாவது: இந்தியாவை விட அமெரிக்காவில் 10 மடங்கு அதிகமாக பூச்சி மருந்து பயன்படுத்தப்படுகிறது. ஆனால் பயிர்களில் எஞ்சியுள்ள பூச்சி மருந்தின் நஞ்சு பற்றியும் அதன் பாதிப்புகள் பற்றியும் இந்திய விவசாயிகளுக்கு போதுமான விழிப்புணர்வு இல்லை. பயிர்களில் எஞ்சும் நஞ்சு, மனிதர்களில் பல்வேறு அபாயகரமான நோய்களை வரவழைத்து விடுகிறது. பூச்சி மருந்து அடித்த மறுநாளே அறுவடை செய்து விற்பனைக்கு கொண்டு வந்து விடுவதை தவிர்க்க வேண்டும். சந்தைக்கு கொண்டு வருவதற்கு சிறிது நாட்கள் முன்பே பூச்சி மருந்து அடித்து விட வேண்டும். அதற்கேற்ப ஆரம்பம் முதலே திட்டமிட வேண்டும். பயிர்களில் எஞ்சிய நஞ்சின் அளவை கண்டறிய, கோவை வேளாண் பல்கலையில் ஆராய்ச்சி "லேப்' உள்ளது. இந்த ஒரே "லேப்' மூலம் தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகளின் உற்பத்தியை பரிசோதிக்க முடியாது. ஆகவே, மண்டல அளவில் மேலும் நான்கு ஆய்வகங்கள் துவங்க பல்கலை திட்டமிட்டுள்ளது. ஒரு ஆய்வகம் நிறுவ 50 லட்சம் ரூபாய் செலவாகும் என்பதால், இது தொடர்பாக ஆய்வகம் துவங்க அரசின் அனுமதி விரைவில் பெறப்படும். விவசாயிகள் உற்பத்தி பொருட்களின் மாதிரிகளை சந்தைக்கு கொண்டு செல்வதற்கு முன் இந்த ஆய்வகங்களில் பரிசோதித்துக் கொள்ளலாம். இவ்வாறு, துணைவேந்தர் கூறினார்.

**உருளைக்கிழங்கு தரம் பிரிக்கும் தொழிலாளர்கள் போராட்டம்**

மேட்டுப்பாளையம்: கூலி உயர்வு கோரி, உருளைக்கிழக்கு தரம் பிரிக்கும் தொழிலாளர்கள் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர். "இது தொடர்பான பேச்சு வரும் 6ம் தேதி நடக்கும்' என, தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து பணிக்கு திரும்பினர். மேட்டுப்பாளையம், உருளைக்கிழங்கு வர்த்தக சபையின் கீழ் 60 மண்டிகள் உள்ளன. நீலகிரி, கோலார், திம்பம், தாளவாடி மற்றும் ஆந்திரா, உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம் உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இருந்தும் உருளைக்கிழங்கு விற்பனைக்கு வருகிறது. கிழங்குகளை தரம் பிரிக்கும் பணியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர் ஈடுபட்டுள்ளனர். நேற்று இவர்கள், பணியை புறக்கணித்து கூலி உயர்வு கேட்டு மண்டிகள் முன் போராட்டம் நடத்தினர். உருளைக்கிழங்கு வர்த்தக சபை செயலாளர் ரங்கசாமி தலைமையில் பேச்சு நடந்தது. துணைத்தலைவர் கோபால், இணைச் செயலாளர் தேவராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர். கிழங்கு தரம் பிரிக்கும் தொழிலாளர் 500 க்கும் மேற்பட்டவர்களுடன் பேச்சு நடந்தது. முடிவு ஏற்படாததால் பேச்சு, வரும் 6ம் தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டது. இதையடுத்து தொழிலாளர்கள், போராட்டத்தை கைவிட்டு வேலைக்கு சென்றனர். தொழிலாளர்கள் கூறுகையில்,"மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை கூலி உயர்வு நிர்ணயம் செய்யப்படுகிறது. நடைமுறையில் உள்ள கூலி முறை கடந்த ஆண்டுடன் முடிந்தது. புதிய கூலி உயர்வு கேட்டு மண்டி உரிமையாளருக்கு கோரிக்கை விடுத்துள்ளோம். ஒரு மூட்டை நீலகிரி உருளைக் கிழங்கை சுத்தம் செய்து, தரம் பிரிக்க 10 ரூபாயும், வெளிமாநில கிழங்குக்கு ஒன்பது ரூபாயும் கேட்டுள்ளோம். விடுமுறை நாட்களில் வேலை செய்தால் இரட்டிப்பு சம்பளம் வழங் கக் கோரியும் கோரிக்கை விடுத்துள்ளோம்' என்றனர்.

**நெல் விவசாயிகளை பாதுகாத்திட மத்திய, மாநில அரசுகளுக்கு கோரிக்கை**

புவனகிரி: நெல் வியாபாரிகளிடமிருந்து விவசாயிகளை பாதுகாத்திட மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. இதுகுறித்து புவனகிரி விவசாய சங்க தலைவர் குமார், முதல்வருக்கு அனுப்பியுள்ள மனு: மாவட்டத்தில் தொடர் மழையால் தண்ணீரில் மூழ்கியும், புகையான் தாக்கியும் நெல் சாகுபடி பெரிதும் பாதித்து விவசாயிகள் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர். நெல் அறுவடை நேரத்தில் நெல் வியாபாரிகள், புரோக் கர்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள் ஒன்று கூடி நெல்லை குறைவான விலைக்கு வாங்க முடிவு செய்துள்ளனர். கடந்த ஆண்டு ஒரு கிலோ நெல்லுக்கு அரசு 10 ரூபாய் நிர்ணயம் செய்தது. அப்பொழுது வியாபாரிகள் கிலோ நெல்லை 15 ரூபாய்க்கு வாங்கினர். ஆனால் தற்போது அரசு 11 ரூபாய் விலை நிர்ணயித்துள்ள நிலையில், வியாபாரிகள் 12.50 ரூபாயிற்கு வாங்க முடிவு செய்துள்ளனர். வெளிச் சந்தையில் அரிசி கிலோ 30 ரூபாயிலிருந்து 45 ரூபாய்வரை விற்கிறது. இந்நிலையில் வியாபாரிகள் விலையை குறைத்து வருவது வேதனையளிக்கிறது. விவசாயிகள் பாதிப்பு என்பது நாட்டின் பாதிப்பாகும். ஆகவே, நெல் வியாபாரிகளிடமிருந்து

விவசாயிகளை பாதுகாத்திட மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

**மரவள்ளி கிழங்குக்கு கூடுதல் விலை: விவசாயிகள் மகிழ்ச்சி**

குஜிலியம்பாறை: வேடசந்தூர் தாலுகா பகுதியில், மரவள்ளி கிழங்கு விவசாயம் அதிகரித்துள்ள நிலையில், விலையும் கூடுதலாக கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்சியடைந்துள்ளனர். வேடசந்தூர் பகுதியில், கடந்த சில ஆண்டுகளாக, சூரியகாந்தி விவசாயத்தில் ஈடுபட்டு வந்த விவசாயிகள் தற்போது மரவள்ளி கிழங்கு விவசாயத்திற்கு மாறியுள்ளனர். குறைந்த செலவில் கூடுதல் மகசூலும், நல்ல விலைக்கு விற்பதால் ஏராளமான விசாயிகள் இந்த விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். கிழங்கு சீசன் துவங்கியுள்ளது. ஒரு டன் கிழங்கு 7 ஆயிரத்து 500 ரூபாய் முதல் 8 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 10 முதல்15 டன் வரை மகசூல் கிடைக்கிறது. வியாபாரிகளே நேரடியாக தோட்டத்திற்கு வந்து, கிழங்குகளை வெட்டி எடை போட்டு எடுத்து செல்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு வேலையும், அலைச்சலும் மிச்சமாகுகிறது. வேடசந்தூர், அழகாபுரி, கூம்பூர், எரியோடு, கோவிலூர் ஆகிய இடங்களில் பல ஏக்கர் பரப்பளவில் மரவள்ளி கிழங்கு பயிரிடப்பட்டுள்ளது. குச்சிக்கிழங்கு, கப்பை கிழங்கு என பல பெயர்களில் அழைக் கப்படுகிறது. இந்தவிவசாயத்தில் கூடுதல் மகசூலும், விலையும் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**தரிசாக மாறும் விவசாய நிலம் : காய்கறி விலை உயர்வு**

கொடைக்கானல்: கொடக்கானல் பகுதியில் நிரந்தர தண்ணீர் வசதி இல்லாததால், மலை கிராமங்களிலுள்ள பெரும்பாலான நிலங்கள் தரிசாகவும், புதர்கள் மண்டியும் கிடக்கிறது. இதனால் காய் கறிகள் விலை உயர்ந்து வருகிறது. மலைகிராமமக்களுக்கு பிரதான தொழிலாக விவசாயம் இருந்துவருகிறது. நிரந்த குடிநீர் தேக்கங்கள் இல்லாததால், ஆங்காங்கே நீரோடைகளில் வரும் தண்ணீரை "பைப்' மூலம் கொண்டு வந்து, தேவையை பூர்த்திசெய்தனர். ஆண்டுக்கு சராசரியாக ஆயிரத்து 660 மி.மீ., மழையளவு இருக்கும். சிலஆண்டுகளாகவே ஆயிரத்திற்கும் குறைவாக மழை பெய்துவருகிறது. நீர்ஓடைகளில் வரும் தண்ணீரும் ஆங்காங்கே ஆக்கிரமிப்புகளால் தடுக் கப்படுகிறது. கூலியாட்களின் சம்பள உயர்வு காரணமாக தற்போது 60 சதவீதம் வரைகாய்கறி உற்பத்தி குறைந்துள்ளது. இதனால் காய்கறிகளின் விலையும் உயர்ந்து வருகிறது. கிடைத்த வரை லாபம் என "ரியல் எஸ்டேட்' உகந்ததாக நிலங்களை விவசாயிகள் மாற்றிவருகின்றனர். விவசாயிகளின் நலனிலும் அக்கறை காட்ட மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**விளைச்சல் குறைவால் பல்லாரி பயிரிட்ட விவசாயிகள் கவலை**

ஒட்டன்சத்திரம்: விளைச்சல் குறைந்ததால் பல்லாரி வெங்காயம் பயிரிட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒட்டன்சத்திரம், காளாஞ்சிபட்டி, அத்திக் கோம்பையை சுற்றியுள்ள பகுதிகளில் பல்லாரி வெங்காயம் பயிரிடப்பட்டுள்ளது. இவை பல இடங்களில் அறுவடை செய்யப்பட்டு வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு வானம் மேக மூட்டமாக காணப்பட்டதால் வெங்காயத் தாள்கள் சுருண்டு விளைச்சல் பாதிக் கப்பட்டன. பல இடங்களில் எதிர் பார்த்த அள விற்கு மகசூல் இல்லை. வெங்காயமும் சிறியதாக காணப்பட்டது. நூறு நாள் வேலை திட்டம் காரணமாக விவசாய தொழிலாளர்கள் பற்றாக்குறை உள்ளது. இதனால் தொழிலாளர்களுக்கு அதிக கூலி கொடுக்க வேண்டி உள்ளது. பல்லாரி வெங்காயம் கிலோ 16 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இது விவசாயிகளுக்கு கட்டுபடியான விலையாகும். இருந்தாலும் விளைச் சல் குறைவாக இருப்பதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காய் வேண்டாம் : காஞ்சிபுரம் விவசாயிகள் வலியுறுத்தல்**

செங்கல்பட்டு : மரபணு மாற்றப்பட்ட பி.டி., கத்தரிக்காயை அனுமதிக்க கூடாது என செங்கல்பட்டில் நடந்த மாவட்ட விவசாயிகள் குறை தீர்வு கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர். கூட்டத்திற்கு கலெக்டர் சந்தோஷ் கே மிஸ்ரா தலைமை தாங்கினார். விவசாயிகள் பேசியதாவது: பெருமாள்(வேடபாளையம்): விவசாயத்திற்கு மருந்து வாங்கினால் கையெழுத்து வாங்கிக் கொள்கின்றனர். பில் கொடுப்பதில்லை. உத்திரமேரூர் தாலுகாவில் ஒரு ரேஷன் கார்டுக்கு 300 ரூபாய் வாங்குகின்றனர். கந்தசுவாமி(பாலூர்): பாலூர் பொதுப்பணித்துறை ஏரி 450 ஏக்கர் பரப்பளவு கொண்டது. நீர்ப்பாசன அளவு 2,547 ஏக்கர். வரத்து கால்வாய் தூர்ந்து விட்டதால், 50 ஆண்டுகளாக நீர்வரத்து இல்லை. பலமுறை மனு கொடுத்தும் பலனில்லை. சிவபெருமான்(பொதுப் பணித்துறை நிர்வாகப் பொறியாளர்): ஏரியையும், கால்வாயையும் பார்வையிட்டுள் ளோம்.

கால்வாயை விவசாயிகள் தூர் வார உள்ளனர். கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற கலெக்டருக்கு பரிந் துரைத்துள்ளோம்.

சடகோபன்(ஊத்துக்காடு): விவசாய இயந்திரங்கள் கிடைக்க அதிகாரிகள் வழி செய்ய வேண்டும். வேளாண் மைத்துறையில் களப்பணியாளர்கள் குறைவு.

விவசாயம் தற்போது விஞ்ஞான விவசாயமாக மாறிவிட்டது. அதற்கேற்ப அதிகாரிகள் பயிற்சி அளிக்க வேண்டும். நம் மாவட்டத்தில் வேலை உறுதி திட்டத்தை ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங் களில் நடைமுறைப் படுத்தினால் விவசாயத்திற்கு ஆட்கள் கிடைப்பர்.

சிட்டா, பட்டா, பட்டா மாற்றம் கிடைக்காத நிலை உள்ளது. வேளாண்மை, தோட் டக்கலைத் துறை அதிகாரிகள் விவசாயிகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்: நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட 283 கருவிகளுக்கு வழங்கப்பட்ட 101 லட்சம் மதிப்பிற்கு மானியத் தில் 85 லட்சம் மானியம் வழங் கப்பட்டுள்ளது. மீதியுள்ள 16 லட்சம் மானியம் முதலில் விண்ணப்பிப்பவர்களுக்கு வழங்கப்படும்.

கலெக்டர்: விண்ணப்பம் வழங்குங்கள். இந்த ஆண்டு மானியம் முடிந்துவிட்டாலும் அடுத்த ஆண்டு மானியம் வழங்க முன்னுரிமை வழங்கப் படும்.

நேரு( தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர்): காஞ்சிபுரம், உத்திரமேரூர் பகுதிகளில் தரமற்ற பூச்சி மருந்துகளை கடைகளில் விற்கின்றனர். வேளாண்மைத்துறை அதிகாரிகள் சோதனை நடத்த வேண் டும். கிசான் கிரெடிட் கார்டால் பயன் கிடைக்கவில்லை.

கலெக்டர்: வங்கி அதிகாரிகள் கலந்து கொள்ளும் கூட்டங் களில் கலந்து கொண்டு கேளுங் கள்.

நேரு: உழவர் பாதுகாப்பு அட்டை திட்டத்தின் கீழ் மனு கொடுத்தவர்களுக்கு நிதியுதவி கிடைக்கவில்லை. செங்கல்பட்டு பாலாற்றில் 30 அடி, 40 அடி மணல் எடுத்துவிட்டனர். மணல் எடுப்பதை தடுக்க வேண்டும். மரபணு மாற்றப்பட்ட பி.டி., கத்தரிக்காயை அனுமதிக்க கூடாது. அப்போதுதான் உள் நாட்டு கத்தரிக்காய் அழியாமல் பாதுகாக்கப்படும்.

அன்பழகன்(தாமல்): காஞ்சிபுரம் - காவேரிப்பாக்கம் இடை யே இயக்கப்பட்டு நிறுத்தப் பட்ட அரசு டவுன் பஸ் டி 40ஐ மீண்டும் இயக்க வேண்டும். பழையசீவரம் எஸ்.வி., சர்க்கரை ஆலையில் நிலுவைத் தொகையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குமார்(விவசாயிகள் சங்கம்): திருக்கழுக்குன்றம் வெள்ளப் பந்தல் கிராமத்தில் திருவாடுதுறை ஆதீனத்திற்கு சொந்தமான 250 ஏக்கர் நிலம் உள்ளது. அதை அரசே வாங்கி விவசாயிகளுக்கு வழங்கி, தவணை முறையில் பணம் வசூலிக்க வேண்டும்.

சந்திரவேலவன்(சோகண்டி): சோகண்டி உயர்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் 15 பேர் ஆக்கிரமித்து வீடுகட்டி, விவசாயம் செய்து வருகின்றனர்.

ஊராட்சி தலைவரும் வீடு கட்டுங்கள். பட்டா வாங்கித் தருகிறேன் என்கிறார். கிராம நிர்வாக அலுவலரும் ஆட்சேபனையில்லா சான்றிதழ் வழங்குகிறார். இதுவரை மூன்று முறை உங்களிடம் புகார் கொடுத்தேன். நடவடிக்கை இல்லை.

கலெக்டர்: மனு கொடுங்கள்

அரும்புலியூர் விவசாயிகள்: டி.ஏ.பி., யூரியா மருந்துகள் கூட்டுறவு வங்கியில் கிடைப்பதில்லை.

கலெக்டர்: காவணிப்பாக்கம் வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு 10 டன் யூரியா, 9.3 டன் டி.ஏ.பி.,

அனுப்பப்பட்டுள்ளது. வினியோகத்தில் குறைபாடு ஏற்பட்டுள்ளது. மக்களுக்கு போய் சேரவில்லை.  அதிகாரிகள் கவனிக்க வேண்டும்.

கிருஷ்ணன்(மதுராந்தகம்): மதுராந்தகம் ஏரியிலிருந்து கீழப்பாக்கம் அணை மூலம் கிணார் ஏரிவாக்கம், கே.கே., புதூர், இருசமநல்லூர் பகுதிகள் பயன்பெற்று வந்தன. 1967ல் அணை உடைந்தது. இன்னும் சரி செய்யவில்லை. 1,300 ஏக்கர் நிலங்கள் விசாயம் செய்ய முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளன.

பொதுப்பணித்துறை நிர்வாகப் பொறியாளர்: நாளை மறுநாள் நேரில் வந்து பார்க்கிறோம்.

கூட்டம் முடிந்ததும் கலெக் டரை சூழ்ந்து கொண்ட மெய் யூர் ராஜாம்பேட்டை மகளிர் குழு உறுப்பினர்கள், ஆடு மாடுகளை மேய்க்க முடியவில் லை.

ஏரி மற்றும் சுடுகாட்டை ஆக்கிரமித்து பயிர் செய்துள்ளனர்.  மழைக்காலத்தில் ஏரியில் தண்ணீர் தேங்கவிடாமல் ஏரியை ஆக்கிரமிப்பாளர்கள் உடைத்து விடுகின்றனர் எனப் புகார் தெரிவித்தனர். கலெக்டர் புகார் மனு கொடுக்கும்படி கூறிவிட்டு புறப்பட்டார்.

**இயற்கை உரங்கள் தயாரிக்க உரிமம் : வேளாண்மை துறை அறிவிப்பு**

காஞ்சிபுரம் : இயற்கை உரங்கள் மற்றும் உயிர் உரங்கள் தயாரிக்கவும், விற்பனை செய்யவும் உரிமம் பெற வேண்டும் என, வேளாண்மைத் துறை அறிவித் துள்ளது. உரக்கட்டுப்பாடு சட்டப் படி உரிமம் பெற்று இயற்கை உரங்கள் மற்றும் உயிர் உரங்கள் தயாரித்து வினியோகம் செய்யப் பட்டு வந்தது. இடையில் இயற்கை உரங்கள் மற்றும் உயிர் உரங்கள் தயாரிக்க இயற்றப்பட்ட சட்டத்தை நெறிமுறைப் படுத்துவதற்காக, இயற்கை உரங்கள் மற்றும் உயிர் உரங்கள் தயாரிக்க உரிமம் வழங்குவது, தற்காலிகமாக ரத்து செய் யப்பட்டிருந்தது. தற் போது அதற்கான சட்டம் அமல்படுத்தப் பட்டு உரம் உரிமம் வழங் கப்படுகிறது. எனவே இயற்கை உரம், மற்றும் உயிர் உரங்கள் தயாரிப்பவர்கள், உரக் கட்டுப்பாடு சட்டப்படி உரிமம் பெற்ற பிறகே தயாரித்து வினியோகம் செய்ய வேண்டும். உரிமம் பெறாமல் தயாரித்து வினியோகம் செய்பவர்கள் மீது, உரக் கட்டுப் பாடு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் படும் என, காஞ்சிபுரம் வேளாண் மை இணை இயக்குனர் செல்வபிள்ளை தெரிவித் துள்ளார்.

**வெயில் தாக்கத்தால் ஜூஸ் வகைகளுக்கு மவுசு : தேவை அதிகரிப்பால் பழங்கள் விலை உயர்வு**

மார்த்தாண்டம்: பகலில் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளதால் ஜூஸ் வகைகளின் தேவை அதிகரித்துள்ளது. இதனால் பழங்களின் விலை கடுமையாக ஏறியுள்ளது. மார்த்தாண்டம் மார்க்கெட் செவ்வாய், வெள்ளி கிழமைகளில் கூடுகிறது. மார்க்கெட் வாரத்திற்கு இரண்டு நாள் கூடினாலும் எப்போதும் வியாபாரம் நடந்து வருகிறது. இந்த மார்க்கெட்டில் ஏத்தன், செவ்வாழை, ரசகதலி, மட்டி, மோரீஸ் போன்ற பழங்கள் கிடைக்கிறது.

பழங்கள் விலை கடந்த சில மாதங்களாக ஏறுமுகத்திலேயே காணப்படுகிறது. இந்நிலையில் தற்போது பகல் வேளைகளில் கடுமையான வெயில் கொளுத்துகிறது. அத்துடன் திருமண சீசனும் உள்ளது. குறிப்பாக இந்த வாரத்தில் செவ்வாய் கிழமையை தவிர அனைத்து நாட்களும் முகூர்த்த நாட்களாக உள்ளது.

மார்த்தாண்டத்தில் உள்ள அனைத்து திருமண மண்டபங்களிலும் திருமணம் நடந்து வருகிறது. மார்த்தாண்டம் மார்க்கெட்டில் பழங்கள் விலை எதிர்பாராத விதத்தில் கடுமையாக ஏறியுள்ளது. நூறு ஏத்தம் பழம் 500 ரூபாய் முதல் 600 ரூபாய் வரையும், நூறு செவ்வாழை பழம் 400 ரூபாய் முதல் 650 ரூபாய் வரையும் விற்பனை செய்யப்படுகிறது. இதை போல் மட்டி பழமும் கடுமையான விலையேற்றத்தை கண்டுள்ளது. திருமணங்கள் நடத்துபவர்களுக்கு உணவு பரிமாற்றத்தின் போது பழங்கள் தேவை என்பதால் வியாபாரிகள் கேட்டும் விலை கொடுத்து வாங்கி செல்கின்றனர். பழங்கள் விலை ஏற்றத்தால் பெட்டிக்கடை உரிமையாளர்கள் அதாவது சில்லறை வியாபாரிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். மார்த்தாண்டம், குழித்துறை பகுதி கடைகளில் ஒரு ஏத்தன் பழம் ஐந்து ரூபாய் முதல் எட்டு ரூபாய் வரையும், ஒரு செவ்வாழை பழம் ஐந்து ரூபாய் முதல் ஒன்பது ரூபாய் வரையும் விற்பனை செய்யப்படுகிறது.

இது குறித்து மார்த்தாண்டத்தை சேர்ந்த வியாபாரி ராமகிருஷ்ணன் கூறியதாவது: குமரி, நெல்லை மாவட்டங்களில் இருந்து பழங்கள் வெளிநாடுகளுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதற்கான வியாபாரிகள்

தோட்டங்களில் சென்று வாங்கி செல்கின்றனர். இதனால் மார்க்கெட்டுகளில் தேவைக்கு ஏற்ப பழங்கள் வரத்து இல்லை. தற்போது திருமண சீசன் என்பதால், தேவை அதிகமாக உள்ளது. அத்துடன் ஜூஸ் வகைகளுக்கு தற்போது கடுமையான டிமாண்ட் உள்ளது. இதனால் விலை கடுமையாக ஏறியுள்ளது. அடுத்த மாதம் விலை குறையலாம் என்று எதிர்பார்க்கிறோம். இவ்வாறு ராமகிருஷ்ணன் கூறினார்.

**அடுத்த தலைமுறைக்கு விவசாய அறிவு : வேளாண் பல்கலை கல்வி இயக்குனர் அட்வைஸ்**

குலசேகரம்: அடுத்த தலைமுறைக்கு விவசாயத்தை எடுத்து செல்ல வேண்டுமென குலசேகரத்தில் நடந்த வேளாண் தொழில்நுட்ப வாரவிழாவில் கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குநர் கலைச்செல்வன் பேசினார். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக கன்னியாகுமரி மாவட்ட வேளாண்மை அறிவியல் நிலையம் நடத்தும் வேளாண் தொழில்நுட்ப வாரவிழாவின் துவக்கவிழா குலசேகரம் எப்.ஏ.சி., ஆடிட்டோரியத்தில் நடந்தது. விழாவில் பேச்சிப்பாறை வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் முனைவர் இறைவன் வரவேற்றார். பெங்களூரு இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக எட்டாவது மண்டல திட்ட இயக்குநர் சாய்ராம், மாவட்ட வேளாண் இணை இயக்குநர் விஜயகுமார், மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் பிரான்சிஸ் வேதமாணிக்கம், மார்த்தாண்டம் துணை ரப்பர் போர்டு கமிஷனர் முரளீதரன் நாயர், மாவட்ட முன்னோடி பாங்க் மேலாளர் சந்திரசேகரன், திருப்பதிசாரம் வேளாண் அறிவியல் ஆராய்ச்சி மைய தலைவர் முனைவர் கிருபாகரன், பேச்சிப்பாறை மலை வேளாண் அறிவியல் மைய தலைவர் பிரேம்ஜோஸ்வா, தோவாளை மலர் ஆராய்ச்சி மைய தலைவர் சுவர்ணபிரியா, மாவட்ட தோட்டக்கலை அராய்ச்சி மைய நிர்வாகி அசோக் பேசினர்.

முன்னதாக வேளாண் தொழில்நுட்ப வாரவிழாவில் அமைக்கப்பட்டிருந்த கருத்துக்கண்காட்சியை திறந்துவைத்து, நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து கோயம்பத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குநர் கலைச்செல்வன் பேசியதாவது: தமிழகத்தில் வேளாண் தொழில்நுட்ப வார விழா இதுவரை 6 இடங்களில் நடத்தப்பட்டது. 7வதாக தற்போது குலசேகரத்தில் நடக்கிறது. விவசாயிகள் புதிய தொழில்நுட்பங்களை கடைபிடித்து அதிக மகசூலுடன் லாபம்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த விழாவை நடத்துகிறோம். விவசாயிகள் தொழில் அறிவு, சேவை, இடு பொருட்கள் பற்றி தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். தமிழகத்தில் 32 வேளாண்மை அறிவியல் ஆராய்ச்சி மையங்கள் உள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்தில் திருப்பதிசாரத்தில் நெல் ஆராய்ச்சி மையம், பேச்சிப்பாறையில் மலைப்பயிர், வாசனை பயிர் ஆராய்ச்சி மையம், தோவாளையில் மலர் ஆராய்ச்சி மையம் உள்ளது.

இத்தனை ஆராய்ச்சி மைங்கள் பெற்றுள்ளது இந்த மாவட்டத்திற்கு பெருமையாகும். விவசாயிகளுக்கு கருத்துகளை எடுத்துரைக்கும் போது எளிமையாக சொல்ல வேண்டும். தமிழகத்தில் 350 ரக நெற்பயிர்கள் உள்ளன. வேளாண்மைக்கு கூலிகள் கிடைப்பது அரிதாகி வருகிறது. அதை ஈடுசெய்ய வேளாண் கருவிகளை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். தற்போது 130 வகையான விவசாய கருவிகள் உள்ளன. அடுத்த தலைமுறைக்கு விவசாயத்தை கொண்டு செல்ல வேண்டும். அதற்கு விவசாய பரப்பளவு, உற்பத்தியை உயர்த்த வேண்டும். விவசாயிகளுக்கு உப தொழிலாக நாமக்கல் மாவட்டத்திலுள்ள விலங்கியல் பல்கலைக்கழகம் மூலம் ஆடு, மாடு, பன்றி, வான்கோழி வளர்ப்பு பயிற்சிகளை கொடுத்து வருகிறோம். மேய்ச்சல் நிலங்கள் இல்லாத பகுதிக்கு ஏற்றவகையில் ஆடு வளர்ப்பு பயிற்சி கொடுக்கிறோம். ஒரு ஆடு 6 முதல் 7 மாதத்தில் 45 கிலோ வரை எடையுள்ளதாக மாறுகிறது. இந்த ஆடு 4 ஆயிரத்து 500 ரூபாய் விலை போகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழை, தென்னை பயிரிடும் விவசாயிகள் ஊடுபயிர்கள் விவசாயம் செய்து அதிக வருவாய் ஈட்டுகின்றனர். விவசாயிகள் தங்களது பிரச்னைகளை இதுபோல் நடத்தப்படும் தொழில்நுட்ப வார விழாக்களிலும், ஆராய்ச்சி மையங்களிலும் தொடர்பு கொண்டு தெரிவித்து, தங்களது சந்தேகங்களை தீர்த்து கொள்ள வேண்டும். இவ்வாறு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குநர் முனைவர் கலைச்செல்வன் பேசினார். பேச்சிப்பாறை வேளாண்மை அறிவியல் மைய இணைப் பேராசிரியர் தங்க செல்வபாய் நன்றி கூறினார்.

**பருவநிலை மாற்றத்தால் மல்லிகை சாகுபடி பாதிப்பு: விவசாயிகள் கவலை**

வேலாயுதம்பாளையம்: பனிப்பொழிவு உள்ளிட்ட பருவநிலை மாற்றத்தால் மல்லிகை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளதால், வேலாயுதம்பாளையம் சுற்றியுள்ள விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர். வேலாயுதம்பாளையம் சுற்றியுள்ள சேமங்கி, மரவாபாளையம், புங்கோடை, வேட்டமங்கலம் பகுதியில் 50 ஏக்கருக்கு மேல் பரப்பளவில் மல்லிகைப்பூ சாகுபடி செய்யப்படுகிறது. இப்குதியில் ஊசி மல்லிகை, குண்டு மல்லி, அடுக்கு மல்லி ரகங்கள் அதிக அளவில் வளர்க்கப்படுகிறது. செடிகளை வரிசையாக பாத்தி கட்டி உரம் வைத்து பூச்சிகொல்லி மருந்து தெளித்து பாதுகாத்து வளர்க்கப்படுகிறது.

எப்போதும் கார்த்திகை மாதம் கடைசி வாரம் முதல் மார்கழி, தை கடைசி வாரம் வரையில் பூத்து குலுங்குகிறது. இங்கு களிமண் கலந்து வண்டல் சேற்று மணல் உள்ளதால், குறைந்த அளவு தண்ணீர் பாய்ச்சினால் கூட மல்லிகை செடியின் அடிவேர் காய்ந்துபோகாதவகையில் ஈப்பதம் நீண்ட நேரம் நீடிப்பதால், மல்லிகை செடி மற்றும் பூ வளர்ச்சி சிறப்பாக ருக்கிறது. நன்கு வளர்ந்த ஒரு செடியில் சுமார் 100 கிராம் முதல் 250 கிராம் வரை தினசரி பூ பறிக்கலாம். இவ்வாறு ஒரு ஏக்கருக்கு குறைந்த பட்சம் ஐந்து கிலோ பூவாவது தினசரி பறிக்கும் வாய்ப்பு உள்ளது. தற்போது சீசன் முடிந்த காரணத்தினால் பூ மொட்டு வருவதே குறைந்துவிட்டது. மேலும், வரும் மொட்டும் சிறுத்துபோகிறது.

தற்போது சீசன் முடிந்தாலும், தை முதல் முகூர்த்த காலம் துவங்குவதால், மாசி மாதம் வரை பூ தேவை அதிகரிக்கிறது. இந்த காலகட்டத்தில் ஒரு கிலோ மல்லிகை பூ 500 ரூபாய் வரை விலை வைக்கப்படுகிறது. தற்போது பருவ நிலை மாற்றம் காரணமாக வெளிமாவட்டங்களில் இருந்து வியாபாரிகள், இப்பகுதிக்கு வருவதால், மல்லிகையின் விலை ஒரு கிலோ ஆயிரம் ரூபாய்க்கு மேல் எகிறி செல்கிறது. இந்நிலையில், ஏக்கருக்கு ஐந்து முதல் 10 கிலோ வரை பூக்கும் மல்லிகை பூவானது, தற்போது அரை கிலோதான் கிடைக்கிறது. கடந்த இரண்டு மாதமாக தொடரும் கடும் பனிப்பொழிவு காரணமாக, மல்லிகை மொட்டு அரும்புவது பாதிக்கப்பட்டுள்ளது.

காலையில் பனியும், பகலில் கடுமையான வெப்பமும் உள்ளதால், 10 சதவீத செடிகளில் மட்டுமே அரும்பு வருகிறது. மல்லிகையின் தேவை அதிகரித்துள்ள நிலையில், கூடுதல் லாபம் கிடைக்கவேண்டிய காலகட்டத்தில், செடியில் அரும்பு வருவது மிகவும் குறைந்துவிட்டதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். பருவநிலை மாற்றத்தை தாக்குப்பிடிக்கும் வகையில் வீரியமிக்க மல்லிகை செடி கன்று களை அளிக்க தோட்டக்கலைத்துறை சார்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**வெறிச்சோடி கிடக்கும் நீடாமங்கலம் உழவர் சந்தை**

நீடாமங்கலம் : போதுமான காய்கறி உற்பத்தி கிடைக்காததால் நீடாமங்கலம் உழவர் சந்தை வெறிச்சோடியுள்ளது.நீடாமங்கலம் உழவர் சந்தையை கடந்த 12.1.2009ல் அமைச்சர் மதிவாணன் தொடக்கி வைத்தார். ஓராண்டாகியும் உழவர் சந்தை செயல்பாடு முழுமையாக இல்லை. நீடாமங்கலத்தை சுற்றி வெண்ணாறு, பாமணியாறு, கோரையாறு ஆகியவை ஓடுகிறது. ஆற்றுப்படுகைகளும் உள்ளன. படுகைகளில் ஒரு சிலர் தங்கள் தேவைக்கு மட்டும் கீரை, கத்தரி, வெண்டைக்காய், பச்சைமிளகாய், புடலங்காய், அவரை போன்ற காய்களை பயிரிடுகின்றனர்.உழவர் சந்தையில் வைத்து விற்பனை செய்யும் அளவிற்கு உற்பத்தி கிடையாது. நீடாமங்கலம் மற்றும் சுற்றுப்பகுதி கிராமங்களை சேர்ந்த மக்களுக்கு தேவையான காய்கறிகள் கும்பகோணம், தாராசுரம், அம்மாபேட்டை போன்ற இடங்களில் இருந்து கொள்முதல் செய்து தனியார் வியாபாரிகள் விற்று வருகின்றனர். சாலையோரங்களில் தரைக்கடைகள் அமைக்கப்பட்டு காய்கறிகள் விற்கப்படுகிறது. குறைந்த அளவில் தான் இவர்களால் விற்பனை செய்ய முடிகிறது. உழவர் சந்தை ஊரின் ஒதுக்குப்புறத்தில் உள்ளது. இதனால் வெளியூர்களில் இருந்து காய்கறிகளை கொண்டு வருபவர்கள் தங்கள் கடைகளை உழவர் சந்தையில் வைத்தால் வியாபாரம் ஆகாமல் நஷ்டம் ஏற்படும் என்று அச்சப்படுகின்றனர்.உழவர் சந்தையில் 58 கடைகள் வைத்து நடத்துவதற்கு இடவசதி உள்ளது.மேலும் கடைகளுக்கு வாடகை கிடையாது. நீடாமங்கலத்திலுள்ள பிற்பட்டோர்

நலத்துறை மாணவர் விடுதி, ஆதிதிராவிடர் மாணவர் விடுதி, யமுனாம்பாள் சத்திரம் மாணவிகள் விடுதி, பள்ளிகளில் வழங்கப்படும் சத்துணவு மையங்கள், குழந்தை காப்பகங்களுக்கு தேவையான காய்கறிகளை உழவர் சந்தையில் வாங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.அதிக லாபமில்லாமல் விலை குறைவாக தரமான காய்கறிகளை வெளியூர்களில் இருந்து கொள்முதல் செய்து உழவர் சந்தை விற்பனைக்கு கொண்டு வர வேண்டும். நீடாமங்கலம் ஆற்றுப்படுகைகளில் காய்கறிகள் பயிர் செய்ய தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண்துறை முன் வர வேண்டும்.காய்கறி பயிர்கள் உற்பத்தி செய்வதற்கு போதுமான இட ஒதுக்கீடு, கோடையில் தண்ணீர் வசதி செய்து தரவேண்டும். இவற்றின் மூலம் உழவர் சந்தையின் செயல்பாடு முழுமையாக இருக்கும். தற்போது காய்கறிகள் வரத்து இல்லாததால் உழவர்சந்தை வெறிச்சோடி கிடக்கிறது. எனவே இதுகுறித்து அரசு உரிய நடவடிக்கை மேற்கொண்டு உழவர் சந்தையை புதுப்பொலிவு பெற செய்ய வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**வேலி பயிராக காட்டாமணக்கு : விவசாயிகள் ஆர்வம்**

முதுகுளத்தூர்: முதுகுளத்தூர் பகுதியில் தானிய வேலி பயிராக காட்டாமணக்கு பயிரிடுவது அதிகரித்துள்ளதால், பயிர்களும் பாதுகாப்பாக இருப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். முதுகுளத்தூர் பகுதியில் கோடை காலங்களில் விவசாயம் அத்தி பூத்தாற்போல் தான் இருக்கும். ஒரு சில பகுதிகளில் மட்டும் மிளகாய், பருத்தி பயிரிடப்பட்டு, இதை பாதுகாக்க விவசாயிகள் படாத பாடுபட்டு கொண்டுள்ளனர். கடந்த சில ஆண்டுகளாக தானிய வேலி பயிராக சோளம், கம்பு, கேழ்வரகும், கோடை காலத்தில் காட்டாமணக்கும் பயிரிட்டு பயிர்களை பாதுகாத்தும் விவசாயிகள் சம்பாதித்து வருகின்றனர். காட்டாமணக்கு மழை இல்லாவிடிலும், விவசாயிகளுக்கு லாபத்தை ஈட்டி வருவதால், தற்போது, தானிய ஊடுபயிராக காட்டாமணக்கு பயிரிடுவது அதிகரித்துள்ளது. காட்டாமணக்கு மூன்று ஆண்டுகளுக்கு பலனை தந்து, லாபம் ஈட்டுகிறது. கோடை கால பயிர்களான காட்டாமணக்கு விவசாயத்தை மேம்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**தண்ணீர் இன்றி நெல் வயல்கள்... வறண்டன : அறுவடை பருவத்தில் சாவியான சோகம்**

மானாமதுரை: பருவம் தவறிய மழை, பாசனத்திற்கு வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படாததால், மானாமதுரை பகுதியில் நெல் வயல்கள் வறண்டு கிடக்கின்றன. இப்பகுதியில் 40 ஆயிரம் ஏக்கரில் சம்பா நெல் பயிரிடப்பட்டுள்ளது. கொந்தகை, மணலூர், திருப்புவனம், திருப்பாச்சேத்தி, பூவந்தி, பழையனூர், கட்டனூர் உட்பட 15 கிராமங்கள் வலது பிரதான கால்வாய் மூலம் பாசன வசதி பெறுகின்றன. இடைக்காட்டூர், பச்சேரி, வேம்பத்தூர், வேலூர், சிறுகுடி கிராமங்கள் இடது பிரதான கால்வாயில் பயன் பெறுகின்றன. மிளகனூர், கட்டிக் குளம், கீழப்பசலை, குறிச்சி, நெட்டூர், தெ.புதுக்கோட்டை கிராமங்கள் வலது பிரதான கால்வாயின் கடைமடை பகுதியில் உள்ளன. இப்பகுதி விவசாயம் வைகை அணை நீரை நம்பியே உள்ளது. தண்ணீர் இல்லை: ஆண்டுதோறும் நவம்பர் இறுதியில், சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட பாசனத்திற்கு, அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும். இந்த ஆண்டு அணையில் போதிய தண்ணீர் இல்லாததால், இரண்டு நாட்கள் மட்டுமே திறக்கப்பட்டது. வறண்ட நிலங்களில் வந்த குறைந்த அளவு தண்ணீர், கடைமடை பகுதிகளுக்கு போய் சேரவில்லை.

தாமதம்: கண்மாய்களிலும் குறைவான அளவே நீர் தேங்கியது. பருவம் தவறிய மழையால் இப்பகுதி விவசாயிகளும், உரிய காலத்தில் சாகுபடி செய்யவில்லை. வழக்கமாக அக்டோபரில் துவங்க வேண்டிய நடவு பணிகள், நவம்பரில் தான் துவங்கின. தற்போது இவை அறுவடையின் இறுதி கட்டத்தில் உள்ளன. பயிரை காப்பாற்ற அணையில் இருந்து நீர் திறக்க விவசாயிகள் வலியுறுத்தினர். ஆனால் தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால் பயிர் காய்ந்து, கருகும் அவலம் ஏற்பட்டுள்ளது.
ராமநாதபுரம் மாவட்ட பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்ட நிலையில், சிவகங்கை மாவட்ட நிர்வாகம் இதற்கான முயற்சி எடுக்கவில்லை என விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து சிலரின் கருத்துக்கள்:

விவசாய சங்க தலைவர் ஆதிமூலம், திருப்புவனம்: இரு மாவட்டங்களுக்கான பங்கீட்டில், உரிய நீரை மாவட்ட நிர்வாகம் பெற்று தரவில்லை. இதனால் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள பயிர்கள் கருகி வருகின்றன. மாவட்ட பாசனத்திற்கு குறைந்த அளவு தான் திறக்கப்பட்டது. ஆற்றில் மணல் குவாரிகளை ஒட்டிய பகுதிகளை கடப்பதற்குள், இரு நாட்களில் தண்ணீர் நிறுத்தப்பட்டது. கண்மாய்களும் வறண்டு விட்டன. அணையில் நீர் திறக்க, மாவட்ட நிர்வாகம் முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவில்லை.
பாசன சங்க தலைவர் காசி, மேலநெட்டூர்: கடைமடை பாசனத்திற்கு, ஆண்டுதோறும் டிசம்பரில் ஏழு நாட்கள் தண்ணீர் திறக்க வேண்டும். ஆனால், ஜனவரியில் மூன்று நாட்கள் மட்டுமே திறந்தனர்.
மீண்டும் திறக்கப்படும் என எதிர்பார்த்து, கடன் வாங்கி விவசாயம் செய்தோம். தண்ணீர் திறக்கவில்லை. நெற்பயிர்கள் கருகி வருகிறது. இதற்கு இழப்பீடு வழங்க வேண்டும்.
விவசாய சங்க தலைவர் எம். ராமசந்திரன், தெ.புதுக் கோட்டை: கோ- 47, ஆடுதுறை ரக பயிரை 500 ஏக்கர் வரை நடவு செய்தோம். இதில் 370 ஏக்கரில் பயிர்கள் கருகிவிட்டன. பயிர்களை காப்பாற்ற, ஒரு மணி நேரத்திற்கு 15 ரூபாய் என விலைக்கு வாங்கி தண்ணீர் பாய்ச்சினோம். இதனால், 20 ஆயிரம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டது. வங்கி கடனை தள்ளுபடி செய்வதோடு, இழப்பீடு வழங்கவேண்டும்.
மாநில விவசாயிகள் சங்க தலைவர் தங்கமணி: இங்கு 40 ஆயிரம் ஏக்கரில் பயிர்கள் வாடுகின்றன. தண்ணீர் இல்லை என சொல்லும் அரசு, கடன் வாங்கி நடவு செய்த பயிருக்கு இழப்பீடு வழங்கவேண்டும். ஆண்டுக்கு ஏழு நாட்கள் தண்ணீர் திறக்கவேண்டும். இந்த நாட்களில் தண்ணீர் திறப்போம் என்ற உத்தரவாதத்தை, பொதுப்பணித்துறையினர் வழங்க வேண்டும்.

கலெக்டர் மகேசன் காசிராஜன் கூறியதாவது: அக்டோபர், டிசம்பரில் மழை குறைவால், நீர்வரத்து பாதிக்கப்பட்டது. அணையில் தற்போது 44.36 அடி தண்ணீர் மட்டுமே உள்ளது. அணையில் இருப்பில் உள்ள நீரை, திறக்க முயற்சி எடுக்கப் பட்டது. அப்படியே திறந்தாலும், ஆற்றுப்படுகை காய்ந்துள்ளதால், கடைமடை பகுதிகளுக்கு போய் சேராது.

**புரோடீனியா புழுவை கட்டுப்படுத்த வேளாண் உதவி இயக்குனர் யோசனை**

மன்னார்குடி: மன்னார்குடி மற்றும் கோட்டூர் யூனியன்களில் தற்போது பயிரிடப்பட்டுள்ள நிலக்கடலை, உளுந்து மற்றும் பாசிப்பயறு போன்ற பயிர்களில் தாக்கியுள்ள புரோடீனியா புழுவை கட்டுப்படுத்த வேளாண் உதவி இயக்குனர் மயில்வாகனன் யோசனை தெரிவித்துள்ளார். புரோடீனியா புழுவின் தாய் அந்துப்பூச்சி நிலக்கடலை மற்றும் பயறு வகை பயிர்களின் இலைகளின் கீழ் பகுதியில் குவியலாக முட்டைகளை இடும். முட்டைகளில் இருந்து வெளிவரும் இளம் புழுக்கள் இலைகளின் அடிப்பகுதியில் கூட்டமாக இருந்து இலைகளை சுரண்டி உண்ணும். இப்புழுக்கள் மென்சாம்பல் நிறத்தில் கரும்புள்ளிகளுடன் காணப்படும். பாதிக்கப்பட்ட இலைகள் சல்லடை போல காணப்படும். புழுக்கள் சிறிது வளர்ச்சி அடைந்ததும் வயல் முழுவதும் ஊர்ந்து சென்று செடிகளின் இலைகளின் மையப்பகுதியை உண்ணும்.

புழுக்கள் இரவு நேரங்களில் உண்ணும் தன்மை உடையதால், பகல் நேரங்களில் காண இயலாது. புழுக்கள் தோலுரித்து வளர்ச்சியடைந்து கரும்பழுப்பு நிறம் அடைந்து செடிகளின் இலைகள், காய்கள் முதலியவற்றை வேகமாக உண்டு கடுமையான பாதிப்பை உண்டாக்கும். இப்புழுக்கள் பழுப்பு நிறம் அடையும் முன்பாக தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இலைகளின் அடிப்பகுதியில் உள்ள முட்டை குவியல்கள் மற்றும் இளம் புழுக்களை இலையுடன் எடுத்து அழிக்க வேண்டும். மேலும், புழுக்களை கட்டுப்படுத்த என்.பி.வி., எனும் நச்சுயிரியை ஒரு ஏக்கருக்கு 100 எம்.எல்., என்ற அளவில் ஒரு கிலோ நாட்டுச்சர்க்கரை கலந்து 200 லிட்டர் நீரில் கலந்து மாலை வேளையில் கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

அல்லது ஐந்து கிலோ அரிசி தவிடு, அரைக்கிலோ நாட்டுச்சர்க்கரை, அரைக்கிலோ கார்பரில் 50 சதவீதம் மருந்து இவற்றை ஐந்து லிட்டர் நீருடன் கலந்து சிறு, சிறு உருண்டைகளாக்கி தூவ வேண்டும். மாலை வேளையில் மண்ணுக்குள் இருந்து வெளிவரும் புழுக்கள் இந்த நச்சு உணவை உண்டு இறக்கும். அல்லது நீல வண்ணத்துணியை வயலில் ஆங்காங்கே விரித்து வைத்தால் புழுக்கள் அதனடியில் வந்து தங்கும். அப்போது புழுக்களை எடுத்து அழித்துவிடலாம். ஒரு ஏக்கருக்கு குளோர்பைரிபாஸ் 800 மில்லி, டைக்குளோர்பாஸ் 400 மில்லி, பென்தயோட் 800 மில்லி முதலிய மருந்துகளில் ஏதேனும் ஒன்றை 200 லிட்டர் நீரில் கலந்து வயலில் உள்ள செடிகள் மற்றும் தரை முழுவதும் நன்கு நனையும்படி மாலை வேளையில் கைத்தெளிப்பான் மூலம் தெளித்து புரோடீனியா புழுக்களை கட்டுப்படுத்தலாம். பயறு வகை பயிர்களுக்கு தேவையான பயிர் பாதுகாப்பு மருந்துகள் 50 சதவீத மானிய விலையில் தனியார் நிறுவனங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. மானிய விலையில் பயிர் பாதுகாப்பு மருந்துகள் பெற சம்மந்தப்பட்ட பகுதி உதவி வேளாண் அலுவலரின் பரிந்துரை பெற்று அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களில் மருந்துகளை பெற்று பயனடையலாம், என அவர் தெரிவித்துள்ளார்.

**புவி வெப்பமாவதை தடுக்க மரக்கன்று நடும்விழா**

ஆறுமுகநேரி: புவி வெப்பமயமாவதை தடுக்கும் நோக்கில் ஆறுமுகநேரி இளைஞர்கள் மரக்கன்று நடும் நிகழ்ச்சியை துவக்கியுள்ளனர். இயற்கை அழிவின் காரணத்தினால் உலகம் வெப்பமயமாகிக் கொண்டிருக்கிறது. ஒருபுறம் இயற்கையை காக்க வேண்டும் என வலியுறுத்திக் கொண்டிருந்தாலும், மற்றொரு பக்கம் மக்கள் இயற்கையை அழித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இதனை தடுத்து இயற்கை வளத்தை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில் இதனை வலியுறுத்தி மரக்கன்று நடும் நிகழ்ச்சியை ஆறுமுகநேரியைச் சேர்ந்த இளைஞர்கள் துவக்கி உள்ளனர். ஆறுமுகநேரி இந்து துவக்கப்பள்ளி, சரஸ்வதி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் நடந்த மரக்கன்று நடும் நிகழ்ச்சியில் லெட்சுமிமாநகரத்தைச் சார்ந்த தங்கபாண்டியன், சிவா, ராஜாராம் ஆகியோர் மரக்கன்று நட்டி துவக்கி வைத்தனர். நிகழ்ச்சியில் பள்ளி தலைமை ஆசிரியர் உதயசுந்தர், தலைமை ஆசிரியை மாரிதங்கம் உட்பட பலர் கலந்து கொண்டு மரக்கன்று நட்டனர். இதே போன்று ஆறுமுகநேரி பகுதியில் உள்ள பல்வேறு பொதுநல இடங்களில் இதே போன்று மரக்கன்று தொடர்ந்து நடப்போவதாக இளைஞர்கள் தெரிவித்தனர்.

**பயறு வகை பயிர் சாகுபடி வேளாண் அதிகாரி விளக்கம்**

தென்காசி:நஞ்சை தரிசில் பயறு வகை பயிர் சாகுபடி செய்வது குறித்து செங்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் விளக்கம் அளித்துள்ளார். இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

செங்கோட்டை வட்டாரம் செங்கோட்டை, புளியரை, தாட்கோநகர், கற்குடி, பகவதிபுரம் பகுதிகளில் பிசான நெல் அறுவடை நடந்து வருகிறது. பிசான நெல் அறுவடை செய்த பின் நஞ்சை தரிசில் உளுந்து, பாசிப்பயறு போன்ற பயிர்களை சாகுபடி செய்திடலாம்.ஒரு ஏக்கருக்கு 8 கிலோ விதை வேண்டும். விதைப்பதற்கு 24 மணி நேரம் முன் ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் கார்பன்டைஸிம் மருந்து கலந்து பின் விதைப்பு செய்திட வேண்டும். இதன் மூலம் பூஞ்சான நோய்கள் எதுவும் பயிரை தாக்காத வண்ணம் செய்திடலாம்.

மேலும் விதைப்பதற்கு ஒரு மணி நேரம் முன் டிரைக்கோ டெர்மா விரிடி மருந்தினை ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் கலந்து விதைப்பு செய்திட வேண்டும். இதன் மூலம் வாடல் நோய் எதுவும் பயிரை தாக்காது.விதைப்பதற்கு அரை மணி நேரம் முன் 8 கிலோ விதையுடன் ஆறிய அரிசி கஞ்சி கலந்த பின் ஒரு பொட்டலம் ரைசோபியம் நுண்ணுயிர் பொட்டலத்துடன் கலந்து காய வைத்து பின் விதைப்பு செய்திட வேண்டும்.

இதன் மூலம் விண்ணிலுள்ள தழைச்சத்து பயிர்களின் வேர் முடிச்சுகளில் கிரகிக்கப்பட்டு பயிர் செழித்து வளரும். விவசாயிகள் இதுபோன்ற விதை நேர்த்திகளை பயறு வகை பயிர்களுக்கு செய்து உச்ச விளைச்சல் அடைந்திட வேண்டும் என வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் அறிக்கையில் கூறியுள்ளார்.

**மானிய விலையில் ஜிப்சம் விநியோகம்**

செய்யாறு : செய்யாறு மற்றும் திருமணி வேளாண் விரிவாக்க மையங்களில் 50 சதவீத மானிய விலையில் ஜிப்சம் விநியோகிக்கப்படுகிறது.
"ஐசோபாம்' எண்ணை வித்து மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையாக ஒரு மூட்டை ஜிப்சம் 60 ரூபாய் 20 பைசா விலையில் விநியோகிக்கப்படுகிறது. இப்போது, 45ம் நாள் களை எடுத்து மணிலா பயிர் காய் பிடிக்கும் நிலையில் உள்ளது. ஏக்கருக்கு 2 மூட்டை ஜிப்சம் போட்டு மண் அணைத்து விடுவதால், மண் பொள பொள என எளிதாகி, மால் இறங்கவும், கடலைக்கு தேவையான கால்சியம் மற்றும் எண்ணை சத்து அதிகரிக்க கந்தக சத்தும், ஜிப்சம் உரத்தில் உள்ளது.  எனவே, மணிலா திரட்சியாகவும், கூடுதல் மகசூல் அதிகரிக்கவும் விவசாயிகள் இதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என வேளாண் உதவி இயக்குனர் சாந்தி கேட்டுக் கொண்டுள்ளார்.

**இயற்கை வேளாண் பயிற்சி முகாம்**

திருவண்ணாமலை : மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் மற்றும் கிரிப்கோ நிறுவனம் இணைந்து செ.நாச்சிபட்டு பகுதியில் இயற்கை வேளாண்மை குறித்த கருத்தரங்கம் மற்றும் பயிற்சி முகாம் நடந்தது.
கருத்தரங்கத்துக்கு, கூட்டுறவு இணை பதிவாளர் சுப்பிரமணியன் தலைமை வகித் தார். மாவட்ட கூட்டுறவு ஒன் றிய தனி அலுவலர் ஆறுமுகம் வரவேற்றார். கருத்தரங்கில், கோயம்புத்தூர்வேளாண்மை பல்கலை கழகத்தின் இயற்கை வேளாண்மை பிரிவு ஒருங்கிணைப் பாளர் ரபியுல்லா பேசியதாவது: விவசாயிகள் அதிகளவில் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துவதால், நிலங்கள் அனைத்தும் விஷமாகி விடுகின்றன. இயற்கை விவசாயம் செய்தால் கூடுதல் மகசூல் கிடைக்கும். நிலத் தின் தன்மை பாதுகாக்கப்படும். மண் புழு உரம், நுண் ணுயிர் இடுபொருட்கள், மூலிகை பூச்சிவிரட்டிகள், இயற்கை எரு, பூசான கொல் லிகள் ஆகியற்வறை பயன்படுத்த வேண்டும். இயற்கை விவசாயம் செய்பவர்கள் கட் டாயம் அங்கக சான்றிதழ் பெற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.
கிரிப்கோ முதுநிலை மேலாளர் குமரேசன், திருவண்ணாமலை வேளாண் துணை இயக்குனர் வீரமணி, வேலூர் வேளாண் அலுவலர் சத்தியமூர்த்தி, நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் நாராயணன், விதை சான்று உதவி இயக்குனர் சுப்பிரமணியன், கூட்டுறவு துணை பதிவாளர் மனோகரன், சக்தி பாலிடெக்னிக் கல்லூரி தாளாளர் வெங்கடாஜலபதி, மத்திய கூட்டுறவு வங்கி கள மேலாளர் கருணாகரன், கூட்டுறவு வளர்ச்சி அலுவலர் துரைராஜன் உட் பட பலர் பங்கேற்றனர்.

**விதை கிராம பயிற்சி முகாம்**

வேலூர் : பேர்ணாம்பட்டு அடுத்த பொகளூர் கிராமத்தில் விவசாயி களுக்கு விதை கிராம திட்டம் சார்பாக பயிற்சி நடந்தது.
உதவி வேளாண்மை இயக்குனர் பாபுரவிவர்மன் தலைமை வகித்தார். பஞ்., தலைவர் கோவிந்தசாமி முன்னிலை வகித்தார். துணை வேளாண்மை அலுவலர் செல்வன், பயறு வகைகளின் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கி கூறினார்.ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் ராஜேந்திரன், பன்னீர் செல்வம், நவீன்குமார் செய்திருந்தனர். உதவி வேளாண்மை அலுவலர் சங்கர் நன்றி கூறினார்.

**பயிர் சாகுபடி, உற்பத்தியில் மாவட்டத்திற்கு... தனி இடம்! : துல்லிய பண்ணையத்தால் அதிக மகசூல்**

விழுப்புரம்: துல்லிய பண்ணையம் மற்றும் நுண்ணீர் பாசனக் கருவிகளை கொண்டு நவீன முறையில் சாகுபடி செய்வதால் பிரதான பயிர்களின் சாகுபடி பரப்பு மற்றும் உற் பத்தியில் விழுப்புரம் மாவட்டம் தனி இடம் பிடித்துள்ளது. தமிழகத்தின் நெல் உற்பத்தியில் விழுப்புரம் மாவட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. 2009ம் ஆண்டு சொர்ணவாரி மற்றும் சம்பா பருவத்தில் 3.75 லட்சம் ஏக்கர் பரப்பில் நெல் சாகுபடி செய்ய திட்டமிட்டு இது வரை 3.90 லட்சம் ஏக்கர் பரப் பில் நெல் சாகுபடி செய்யப் பட்டுள் ளது. வரும் நவரை பருவத்தில் 50 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நெல் சாகுபடி செய்ய வாய்ப்புள்ளது. இது வரை 1 லட்சத்து 17 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பில் "செம்மை நெல் சாகுபடி நடவு' பின்பற்றப்பட்டது. 2009ம் ஆண்டில் 5.3 லட்சம் ஏக்கர் பரப்பில் லட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்ய திட்டமிட்டு இது வரை 2.691 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும் வரும் மார்ச் மாதம் 31ம் தேதிக்குள் கூடுதலாக 0.72 லட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்ய வாய்ப்புள்ளது.
நவீன தொழில் நுட்பங்களுடன் கூடிய செம்மை நெல் சாகுபடி முறையை பின்பற்றி நெல் நடவு செய்ததால் விழுப்புரம் மாவட்டத் தின் நெல் உற்பத்தியில் முழுமையாக சாதனை புரிந்து 2009-2010ம் நிதியாண்டில் 3.411 லட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்யப்படும்.
சுமார் 62.5 ஆயிரம் ஏக்கர் பரப் பில் கம்பு, ராகி, மக்காச் சோளம், வரகு போன்ற தானிய பயிர்கள் சாகுபடி செய்து உற்பத்தி இலக்கான 0.62 லட்சம் மெட்ரிக் டன்னுக்கு 0.73 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் 1 லட்சத்து 10 ஆயிரம் ஏக்கர் பரப்பில் பயறு வகை பயிர் கள் சாகுபடி செய்ய திட்டமிட்டு இது வரை 1.30 லட்சம் ஏக்கர் பரப் பில் உளுந்து, துவரை, பச்சைபயறு போன்ற பயிர்கள் வீரிய ரக விதைகள் மற்றும் தரமான சான்று விதைகளை கொண்டு சாகுபடி செய்யப் பட்டுள்ளது. மேலும் பயறு வகை பயிர்களுக்கு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 50 சதவீத மானியத்தில் வழங்கிய நுண்ணீர் பாசனக் கருவிகள் மூலம் நீர் பாசனம் செய்து, பயறு வகை பயிர்கள் பூக்கும் தருணத்தில் டி.ஏ.பி., கரைசல் தெளித் திட 50 சதவீத மானியத்தில் டி.ஏ.பி., வழங்கப்பட்டது. செயல் விளக்கத் தளைகள் அமைத்தது, பயறு நுண்ணுரம் பயன்படுத்தியது போன்ற தொழில் நுட்பங் களை கடை பிடித்து சாகுபடி செய்ததால் இந்த ஆண்டு திட்டமிட்ட உற்பத்தி இலக்கான 0.189 லட்சம் மெட்ரிக் டன்னுக்கு 0.27 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி கிடைக்க வாய்ப்புள்ளது. மேலும் 20 ஆயிரம் ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்ய திட்டமிட்டு இது வரை 15 ஆயிரம் ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்பட் டுள்ளது. அத்துடன் 1.5 லட்சம் ஏக்கரில் மணிலா, எள், எண்ணெய் பனை போன்ற எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடி செய்யப்பட் டுள்ளது.

வேளாண்மை இணை இயக்குனர் பெருமிதம் : மாவட்டத்தில் 1.30 லட்சம் ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்ய திட்டமிட்டு இது வரை 1 லட்சத்து 2500 ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. துல்லிய பண்ணையம் மற்றும் நுண்ணீர் பாசனக் கருவிகளை கொண்டு நவீன முறையில் கரும்பு சாகுபடி செய்வதால் அதிகபட்சமாக ஏக்கருக்கு 97 மெட்ரிக் டன் வரை மகசூல் கிடைத்துள்ளது. இதன் மூலம் பிரதான பயிர்களின் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியில் விழுப்புரம் மாவட்டம் தனி இடம் பிடித்துள்ளது என வேளாண் இணை இயக்குனர் ராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

**பட்டுப்புழுக்களை தாக்கும் 'சுண்ணாம்பு கட்டி' நோய்**

உடுமலை: ""குளிர்காலங்களில் பட்டுப்புழுக்களை தாக்கி, உற்பத்தியில் சேதம் ஏற்படுத்தும் சுண்ணாம்பு கட்டி நோயை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் தடுக்க முடியும்', என உற்பத்தியாளர்கள் ஆலோசனை கூட்டத்தில் விஞ்ஞானி செல்வராஜ் பேசினார். உடுமலை மத்திய பட்டுவாரிய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையத்தில் பட்டுக்கூடு உற்பத்தியாளர்களுக்கான ஆலோசனை கூட்டம் நடந்தது. பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் பன்னீர்செல்வம் முன்னிலை வகித்தார். பட்டுவாரிய விஞ்ஞானி செல்வராஜ் பேசியதாவது:
மழை மற்றும் குளிர்காலங்களில் சுண்ணாம்பு கட்டி நோய் பட்டுப்புழுக்களை தாக்கி சேதம் ஏற்படுத்துகிறது. உடுமலை பகுதியில் இந்த நோய்த்தாக்குதல் சில பகுதிகளில் துவங்கியுள்ளது. இந்தாண்டு பெய்த மழை காரணமாக

அதிகரித்துள்ள ஈரப்பதம் இந்த நோய் பரவுவதற்கு ஏதுவாக உள்ளது. சுண்ணாம்பு கட்டி நோய் பெவேரியா பாஸியானா பூஞ்சையால் ஏற்படுகிறது. சுற்றுப்புறத்தில் நிலவும் அதிக ஈரப்பதம் மற்றும் 24 முதல் 26 டிகிரி செல்சியஸ் வெப்பம் இந்த நோய் பரவுவதற்கு ஏற்ற சூழலாகும். இந்த நோய் தாக்கிய பட்டுப்புழுக்கள் முதலில் மந்தமாகி, பின்னர் இறந்து விடும். சில நேரங்களில் பிரவுன் கலந்த பிங்க் நிறத்திற்கு மாறும். இறந்த புழுக்கள் கெட்டியாகி, வெண்மை நிறத்தில் சாக்பீஸ் போல காணப்படும். இந்த நோய் காற்றின் மூலம் வேகமாக பரவும் தீவிர தொற்றுநோயாகும். இதனால், நோய் தடுப்பு முறைகளை உற்பத்தியாளர்கள் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும். நோய் பரவுவதை தடுக்க, நோய் தாக்கிய புழுக்கள் சாக்பீஸ் போல கடினமாக மாறுவதற்குள் அவற்றை பொறுக்கி எடுக்க வேண்டும். தடுப்பு மருந்தான விஜேதா சப்ளிமெண்ட் கலவையை தூவி எரிக்கவும். நோய் கிருமிகள் மல்பெரி செடிகளை தாக்கும் இலை சுருட்டு புழு மற்றும் பீகார் கம்பளி புழுக்களிலும் நோயை தோற்றுவிக்கின்றன. எனவே மல்பெரி தோட்டத்தை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். புழு வளர்ப்பு மனை மற்றும் தளவாடங்களுக்கு நன்கு மருந்தடிக்க வேண்டும். சுகாதாரத்தை பின்பற்ற வேண்டும். மனையின் வெப்பம் 22 டிகிரி செல்சியஸ்க்கும் குறைவாக இருந் தால், வெப்பத்தை அதிகரிக்க வேண்டும். ஈரப்பதத்தை பராமரிக்க, தேவையான மல்பெரி இலைகளை மட்டும் உணவாக அளித்து விட்டு மீதமாகும் இலைகள் மற்றும் கழிவுகள் சேர்வதை தவிர்க்க வேண்டும். கடினமான புழுப்படுக்கையை தவிர்த்து நல்ல காற்றோட்ட வசதி ஏற்படுத்த வேண்டும். புழுக்கள் தோலுரிக்க செல்லும் போது நீர்த்த சுண்ணாம்பு தூளை தூவ வேண்டும். தோலுரிப்பிற்கு பிறகு விஜேதா சப்ளிமெண்ட்டை பரிந்துரை அடிப்படையில் தூவலாம்.
படுக்கை மருந்தை ஒரே சீராக ஒரு சதுர அடி படுக்கை பரப்பிற்கு 3 முதல் 5 கிராம் வீதம் தூவ வேண்டும். புழுக்கள் உணவு உண்ணும் பருவத்தில் தூவும் போது 4 ம் பருவத்தின் 3 வது நாள், 5 வது பருவத்தின் 2,3,4,5 மற்றும் 6 வது நாளில் புழுக்கள் எல்லா இலைகளையும் தின்ற பிறகே தூவ வேண்டும். இத்தகைய நோய் தடுப்பு மற்றும் முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டால் சுண்ணாம்பு கட்டி நோயில் இருந்து பட்டுப்புழுக்களை காப்பாற்றி, அதிக உற்பத்தி பெறலாம். இவ்வாறு, செல்வராஜ் பேசினார்.

**வெளியிடங்களுக்கு கரும்பு விற்க விவசாயிகளுக்கு வேளாண் துறை தடை**

உடுமலை: "அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் அனுமதி இல்லாமல் வெளியிடங்களுக்கு விற்பதோ, வெல்லம் காய்ச்சுவதோ கூடாது' என, வேளாண் துறை தெரிவித்துள்ளது. வேளாண்மை உதவி இயக்குனர் மற்றும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கை: உடுமலை அருகே உள்ள அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை அரவைக்கு கரும்பு எடுக்கும் எல்லைகளாக, கோவை மாவட்டத்தில் உள்ள பொள்ளாச்சி தாலுகா, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பழனி, ஒட்டன்சத்திரம் தாலுகா, திருப்பூர் மாவட்டத்தில், திருப்பூர் , உடுமலை , தாராபுரம் தாலுகாவிலுள்ள மூலனூர், கன்னிவாடி பிர்க்காக்கள் தவிர மற்ற பகுதிகள், காங்கயம், காடையூர் பகுதிகள் கட்டுப்பாட்டு பகுதிகள். இப்பகுதியில் ஒப்பந்தமிட்ட, ஒப்பந்தமிடாத கரும்புகளை வாங்குவது; ஆலை எல்லைக்கு வெளியிலோ வெல் லம் காய்ச்சுவது, கரும்பு கட்டுப்பாட்டு சட்டப்படி குற்றம். அனுமதியில்லாமல் கரும்பு கொண்டு செல்வதை தடைசெய்து சர்க்கரை துறை ஆணையரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அனுமதியில்லாமல் கரும்பு கொண்டு செல்வதை கண்காணிக்கவும், தடுக்கவும், கோவை, திண்டுக்கல், திருப்பூர் கலெக்டர்கள் தலைமையில், ஆர்.டி.ஓ., தாசில்தார், உதவி வேளாண் இயக்குனர் கொண்ட கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.
அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கரும்பு விவகார எல்லைகளில், ஆலை அரவைக்கு பதிவு செய்துள்ள விவசாயிகள், தங்களது கரும்பை அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு வழங்க வேண்டும்.
அனுமதியில்லாமல் வேறு உபயோகங்களுக்கு பயன்படுத்துவது சட்டப்படி குற்றம். அமராவதி சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை மார்ச் மாதம் துவங்க உள்ளது. எனவே, விவசாயிகள் தங்களது கரும்புகளை ஆலை அரவைக்கு வழங்கி ஒத்துழைக்க வேண்டும். இவ்வாறு, அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**சோளத்தட்டு விற்பனை ஜோர்**

திருப்பூர்: அதிக நாட்களுக்கு பாதுகாப்பாக வைத்திருந்து, மாடுகளுக்கு தீவனப் பயிராக பயன்படுத்தும் சோளத்தட்டு விற்பனை திருப்பூர் சுற்றுப்பகுதிகளில் சூடுபிடித்துள்ளது. திருப்பூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் சோளப்பயிர் அறுவடை செய்யப்பட்டு வருகிறது. நகரின் தொழில் வளர்ச்சியால் விவசாய பரப்பு குறைந் திருந்தாலும், வீரபாண்டி, ஆண்டிபாளையம், நல்லூர், முதலிபாளையம் என சுற்றுப்பகுதிகளில் விவசாயம் ஓரளவு செய்யப்படுகிறது. கடந்த ஐப்பசி மாத மழைக்கு, சோளம் உள்ளிட்ட பயிர்கள் பயிரிடப்பட்டன. அவை, தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. அதிகளவில் அறுவடை செய்யும் போது, அதிக பணி நடப்பதால், இதற்கு விவசாயிகள் "பம்பல்' என்று குறிப்பிடுவர். திருப்பூர் பகுதிகளிலும் மஞ்ச சோளத்தட்டு "பம்பல்' சிறப்பாக நடந்து வருகிறது. மஞ்சள், வெள்ளை, உப்பஞ் சோளம், மக்காச்சோளம் என்ற வகைகளில் இருந்தாலும், திருப்பூர் பகுதிகளில் மஞ்சள் சோளம் அதிகமாக பயிரிடப்படுகிறது. தற் போது சோளத்தட்டு அறுவடை முடியும் தருவாயில் உள்ளது. மஞ்சள் சோளத்தட்டு மாடுகளுக்கு சிறந்த காய்ந்த தீவனமாக இருப்பதால், விவசாயிகள் தங்களது தேவை தவிர, விளைநிலம் இன்றி மாடுகள் வளர்ப்போருக்கு விற்று விடுவர்.
திருப்பூர் பகுதியில் சோளப்பயிர் சில் லரை விற்பனையில் கட்டு 15 ரூபாய் வரையிலும், மொத்தமாக "விசுவு' 650 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. தட்டின் தடிமன், உயரத்திற்கு ஏற்ப விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. அறுவடை காலத் தில் கொள்முதல் செய்து உரிய முறையில் பாதுகாத்தால், ஓராண்டுக்கு மேல் பயன் படுத்தலாம். இதனால், சோளத்தட்டு விற்பனை சூடுபிடித்துள்ளது.

**காட்டன் மார்க்கெட்டில் கலெக்டர் அலுவலகம் : நிரந்தரமாக்க விவசாயிகள் சங்கம் எதிர்ப்பு**

திருப்பூர்: "திருப்பூர் காட்டன் மார்க்கெட் வளாகத்தில், கலெக்டர் அலுவல கத்தை நிரந்தரமாக அமைக்கக் கூடாது' என்று விவசாயிகள் தரப் பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. திருப்பூர் மாவட்டம் உதயமான தும், பல்லடம் ரோட்டில் உள்ள காட்டன் மார்க்கெட் வளாகத்தில், தற்காலிகமாக கலெக்டர் அலுவலகம் அமைக்கப்பட்டது. நிரந்தர கட்டடம் கட்டுவதற்காக, அதிகாரிகள் குழு புறநகர் பகுதியில் பல இடங்களை ஆய்வு செய்து வருகிறது. இந்நிலையில், காட்டன் மார்க்கெட் வளாகத்திலேயே கலெக்டர் அலுவலகம் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்று கோரிக்கைகள் எழுந்தன. இதற்கு, கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. அச்சங்கத் தலைவர் பழனிச்சாமி கூறியதாவது: தொழில் வளர்ச்சியடைந்து வரும் திருப்பூரில், போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. தற்காலிகமாக காட்டன் மார்க்கெட் வளாகத்தில் செயல்படும் கலெக் டர் அலுவலகம் நிரந்தரமாக்கப் பட்டால், போக்குவரத்து நெரிசல் உட்பட பல்வேறு இடையூறுகள் ஏற்படும்.
புதிய கலெக்டர் அலுவலக வளாகம் அமைப்பது தொடர்பாக, அதிகாரிகள் குழுவினர் அலகுமலை பகுதி உள்ளிட்ட பல இடங்களை ஆய்வு செய்துள்ளனர். அலகுமலை அருகே புதிய கலெக்டர் அலு வலக வளாகம் அமைக்கத் தேவை யான கோவில் நிலங்கள் உள்ளன. அனைத்து விவசாய விளை பொருட்களையும் விற்பனை செய்வதற்காக, 1936ல் பல்லடம் ரோட்டில் ஒழுங்குமுறை விற் பனை கூடம் துவங்கப்பட்டது. பருத்தி விற்பனை அதிகமாக இருந்ததால், காட்டன் மார்க்கெட் என்றனர். "காட்டன் மார்க்கெட்டில், நிரந்தரமாக கலெக்டர் அலுவலகம் அமைக்கக் கூடாது' என்று, ஏற் கனவே கலெக்டரிடம் மனு கொடுக் கப்பட்டுள்ளது. காட்டன் மார்க் கெட் வளாகத்தை வணிக வளாக மாக மாற்றி, சுய நலத்துடன் செயல் பட்டு வருகின்றனர். நகரின் மையப் பகுதியில் விவசாயிகளுக்கென ஒதுக்கப்பட்ட மார்க்கெட் வளா கத்தை, விட்டுக்கொடுக்க மாட்டோம். இவ்வாறு, பழனிச்சாமி தெரிவித்தார். தென்னை விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் சண்முகசுந்தரம், காய்கறி பயிரிடுவோர் நல சங்க மாவட்ட தலைவர் குமாரசாமி மற்றும் பலர் உடனிருந்தனர்.

**தென்னை மரத்தில் மர்ம நோய் உடுமலை அருகே தீவிரம் : காய்ப்பு திறன் குறைகிறது**

உடுமலை: தென்னை மரங்களில் மர்ம நோய் வேகமாக பரவி வருவதால் காய்ப்பு திறன் பாதிக்கிறது. இதை பார்த்து விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். உடுமலை அருகேயுள்ள ராமச்சந்திரா புரம், அனிக்கடவு மற்றும் சுற்றுப்பகுதி களில் ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமாக தென்னை பயிரிடப்பட்டுள்ளது. சில வாரங்களுக்கு முன்

கொங்கல்நகரம் ரோட் டில் வரிசையாக உள்ள தோட்டங்களிலுள்ள தென்னை மரங்களின் ஓலை நுனிப் பகுதியில் கரும்புள்ளிகள் தோன்றியது. சில நாட்களில் ஓலைகளில் பச்சையம் குறைந்து கருக துவங்கியது. இந்த நோய் தாக்கிய ஓலைகள் அனைத்தும் தீ வைத்து எரித்தது போல் பழுப்பு நிறமாக மாறியது. நோய் தாக்குதல் வேகமாக அருகிலுள்ள தோட்டங்களுக்கும் பரவியது. இதனால், நூற்றுக்கணக்கான மரங்கள் பாதிக்கப்பட்டதால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்தனர். விவசாயிகள் கூறியதாவது: மர்ம நோய் தாக்குதலால் முற்றிலுமாக காய்கள் பிடிப்பது குறைந்து விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. கோடை காலத்தில் மரங்கள் நோயினால் பாதிக்கப்பட்டால் இயல்பான காய்ப்பு திறன் வர ஓராண்டிற்கு மேலாகும். எனவே, வேளாண்துறை அதிகாரிகள் விஞ்ஞானிகள் குழுவின் மூலம் உடனடியாக ஆய்வு நடத்த வேண்டும் என்றனர். வேளாண்துறை அதிகாரிகள் கூறியதாவது: தட்பவெப்ப நிலை மாற்றம் காரணமாக இலைகருகல் நோய் பரவியுள்ளது. நோய்த்தடுப்பு பணிகளை விவசாயிகள் ஒருங்கிணைந்து மேற்கொண்டால் விரைவில் கட்டுப்படுத்தலாம். நோய்த்தாக்குதலை கட்டுப்படுத்த உயர் அழுத்த தெளிப்பான் மூலம் ஒரு சதவீத போர்ட்டோ கலவையை மரங்களுக்கு தெளிக்கலாம். அல்லது, கான் டாப் மருந்தை மரத்திற்கு 3 மில்லி முதல் 5 மில்லி வரை 10 மில்லி தண்ணீரில் கலந்து வேர் மூலம் அளிக்கலாம்.
இலை கருகல் நோய் குறித்த சந்தேகங்களுக்கு விவசாயிகள் பெதப்பம்பட்டி வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகலாம்', இவ்வாறு தெரிவித்தனர்.

தினகரன்

## மேட்டூர் நீர்மட்டம் 77 அடி

பதிவு செய்த நாள் 2/4/2010 1:06:01 AM



மேட்டூர்: மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு 2009 ஜூலை 28ம் தேதி முதல் ஜனவரி 28ம் தேதி வரை தண்ணீர் திறக்கப்பட்டது. ஜனவரி 28ம் தேதி மாலை தண் ணீர் திறப்பு நிறுத்தப்பட்டது. இந்நிலையில், காவிரி ஆற்றின் கரையில் உள்ள கிராமங்களின் குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 2 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. நேற்று மாலை நிலவரப்படி அணை நீர்மட்டம் 77.11 அடி. அணைக்கு விநாடிக்கு 902 கன அடி தண்ணீர் வருகிறது. நீர் இருப்பு 39.13 டி.எம்.சி.

## தர்பூசணி சீசன் துவங்கியது

பதிவு செய்த நாள் 2/4/2010 3:18:58 AM

விருதுநகர் : கோடையை நினைவுபடுத்தும் வகையில் உடலை குளிரூட்டும் தர்பூசணி வரத்து துவங்கியுள்ளது. தற்போது கிலோ ரூ.8க்கு விற்கப்படுகிறது.

தைமாதத்தில் பனியின் தாக்கம் அதிகமாக இருந்தாலும் பங்குனி மாத வெயிலை நினைத்து மக்கள் அச்சப்படும் நிலை விருதுநகர் மாவட்ட மக்களிடத் தில் இப்பொழுதே துவங்கி விட்டது. பருவ மழை பொய்த்தால் கோடையில் கடும் தண்ணீர் பஞ்சம் ஏற்படும். கோடை வெயிலில் இதம் தரும் தர்பூசணி தை மாதமே வரத்துவங்கி விட்டது. கடந்த ஆண்டு மாவட்டத்தில் வீரசோழன் பகுதியில் இருந்து தர்பூசணி வரத்து இருந்தது. நடப்பாண்டில் மழையின்மையால் விளைச் சல் குறை வாகவே உள்ளது. இதனால் திண்டிவனத்தில் இருந்து தர்பூசணிகள் கொண்டு வரப்பட்டுள்ளன.
வியாபாரி குமார் கூறு கையில், தர்பூசணி விளைச் சல் மாவட்டத்தில் குறைவாக இருப்பதால் தற்« பாது திண்டிவனம் பகுதியில் இருந்து விற்பனைக்காக கொண்டு வந்துள்ளோம். கடந்த ஆண்டு கிலோ ரூ.6க்கு விற்பனையானது. தற்போது கிலோ ரூ.8 முதல் ரூ.10 வரை விற்பனை செய்யப்படுகிறது. வரத்து அதிகாரித்தால் விலை குறைய வாய்ப்பு உள்ளது, என்றார்.

## சூரியசக்தி மின்கலன்களால் 2020ம் ஆண்டிற்குள் 20?ஆயிரம்?மெகாவாட் மின்சாரம் தயாரிக்க இலக்கு

பதிவு செய்த நாள் 2/4/2010 3:17:37 AM

விருதுநகர் : இந்தியாவில் 2020ம் ஆண்டுக்குள் சூரிய சக்தி மூலம் 20 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என பல்கலைக்கழக மானியக்குழு இணைச்செயலர் ஸ்ரீநிவாஸ் தெரிவித்தார்.
விருதுநகர் செந்திக்குமார நாடார் கல்லு£ரியில் இயற்பியல்துறை சார்பில் மரபுசாரா எரிசக்தி பற்றிய தேசிய அளவிலான கருத்தரங்கம் நடந்தது. கல்லு£ரி இயற்பியல் துறை பேராசிரியர் டாக்டர் பிரிதிவிக்குமரன் வரவேற்றார். கல்லு£ரி உபதலைவர் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். பல்கலைக்கழக மானியக் குழு இணைச்செயலர் ஸ்ரீநிவாஸ் பேசியதாவது:
எரிசக்தி தேவைக்கு மரபுசாரா எரிசக்தி வளங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே சூரிய மின்கலன்களின் மூலம் மிகப்பெரிய அளவில் மின் உற்பத்தி செய்யும் “ஜவஹர்லால் நேரு சோலார் மிஷன்“ திட்டத்தை மத்திய அரசு அமல்படுத்தி உள்ளது. இத்திட்டத்தின்மூலம் நாட்டின் மின்சாரத்தேவையை பெருமளவு சமாளிக்க முடியும். இந்தியாவில் சூரிய சக்தி வளம் மிக அதிக அளவில் கிடைக்கிறது. இதன் மூலம் பலகோடி மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும்.
2020ம் ஆண்டுக்குள் சூரிய சக்தி மின்கலன்கள் மூலம் 20 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சூரிய சக்தி மின்சாதனங்கள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கும் ஆராய்ச்சியில் ஈடுபடும் ஆராய்ச்சியாளர்களுக்கும் ஊக்கம் தரும் விதத்தில் மத்திய அரசு பல திட்டங்களை செயல்படுத்த உள்ளது. பல்கலைக்கழக மானியக்குழுவும் மரபுசாரா எரிசக்தி சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளில் கோடிக்கணககான பணத்தை மூதலீடு செய்ய தயாராக உள்ளது.
மேலும் இன்றைய மாணவர்கள் உடனடி வேலைவாய்ப்புள்ள கணிப்பொறி துறையுடன் நீண்ட கால பயன்தரும் ஆற்றல் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளில் ஈடுபட முன்வர வேண்டும். அடிப்படை அறிவியல் கல்விகளான இயற்பியல், வேதியியல் போன்ற துறைகளில் படிக்கும் மாணவர்கள் குறைந்த செலவில் நிறைந்த ஆற்றல் தரும் ஆராய்ச்சி பணிகளிலும் அது சார்ந்த செயல்முறை கருத்தரங்களிலும் பங்கெடுத்து நாட்டின் எரிசக்தி தேவைக்கு தங்களது பங்கினை அளிக்க முன்வரவேண்டும்.
இவ்வாறு அவர் பேசினார். ஏற்பாடுகளை ஓருங்கிணைப்பாளர் டாக்டர் ஜெயக்குமார் செய்திருந்தார்.

## மாட்டுத்தாவணியில் அமைய உள்ள புதிய சென்ட்ரல் மார்க்கெட் இம்மாத இறுதியில் தயாராகும்

பதிவு செய்த நாள் 2/4/2010 3:07:15 AM

மதுரை : மதுரை மாட்டுத் தாவணியில் புதிதாக அமை யும் சென்ட்ரல் மார்க்கெட் இம்மாத இறுதியில் தயாராகி விடும். தற்போதுள்ள மார்க்கெட் காலியானதும் அந்த இடத்தில் நவீன வடி விலான வாகன நிறுத்துமிடம் உருவாகிறது.

மதுரை மாநகராட்சி மேயர் தேன்மொழி, ஆணை யாளர் செபாஸ்டின் நிருபர்களிடம் கூறியதாவது:
மதுரை மாட்டுத்தாவணியில் கட்டப்பட்டு வரும் புதிய சென்ட்ரல் மார்க்கெட் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது. இம்மாத இறுதிக்குள் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு தயாராகிவிடும். மார்க்கெட் டின் உள்பகுதியில் சாலை மற்றும் குடிநீர், கழிப்பிட வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.
மார்க்கெட்டின் நுழைவாயில் லேக்ரோடு பகுதியில் அமைக்கப்படுகிறது. இதனால், மேலூர் சாலையில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படாது. புதிய மார்க்கெட் கடைகளுக்கு மாநகராட்சி குறைத்து நிர்ணயித்துள்ள தொகை செலுத்த வியாபாரிகள் பெரும்பாலும் ஒப்புதல் அளித்துவிட்டனர்.
மத்திய அமைச்சர் மு.க.அழகிரியின் ஏற்பாட்டின்படி 11 இடங்களில் டெல்லியைப் போல இலவச நவீனக் கழிப்பிடங்கள் திறந்துவைக்கப்பட்டன. அதன் செயல்பாட்டை நேரில் சென்று ஆய்வு செய்வோம். இந்தக் கழிப்பறைகளுக்குப் பொதுமக்கள் மத்தியில் சிறப்பான வரவேற்பு உள்ளது. சுத்தமாக பராமரிக்கப்படுகிறது. பஸ் நிலையத்தில் உள்ள நவீன கழிப்பிடங்கள் 24 மணி நேரமும் செயல்படும். மற்ற இடங்களில் உள்ள கழிப்பிடங்கள் காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை செயல்படும்.
ஆம்னி பஸ்களை மாட்டுத் தாவணிக்கு மாற்றும் திட்டம் பரிசீலிக்கப்படும். மதுரை நகரைக் குடிசை இல்லாத நகரமாக மாற்றுவதற்கு மத்திய அரசின் நேரு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் 22 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
அதில் இதுவரை நகர்ப்புறப் பகுதிகளில் பட்டா உள்ள அல்லது அரசுப் புறம்போக்கு இடங்களில் இருக்கும் குடிசைகளை மாற்றி காங்கிரீட் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் பட்டா உள்ள குடிசை களை மாற்றி கட்டிக் கொடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.
இவ்வாறு அவர்கள் கூறினர்.

### கொய்யா ஏற்றுமதி அதிகரிப்பு

பதிவு செய்த நாள் 2/4/2010 4:53:11 AM

கோவை, : தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில் கொய்யா உற்பத்தி, அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் மற்றும் விற்பனை பற்றிய பயிற்சி பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று துவங்கியது. பல்கலைக்கழக துணை வேந்தர் முருகேசபூபதி துவக்கிவைத்து பேசியதாவது: கடந்த 20 ஆண்டுகளில் கொய்யா உற்பத்தி ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. தற்போது இந்தியாவில் 1.78 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் 19.8 லட்சம் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் 8,500 ஹெக்டேரில் கொய்யா பயிரிடப்பட்டு, 93 ஆயிரத்து 300 டன் உற்பத்தி செய்யப்படுகிறது. அமெரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள், நெதர்லாந்து, மலேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு கொய்யா ஏற்றுமதி செய்யப்படுகிறது. 2000&2001ம் ஆண்டு ஒரு கோடியே 72 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 889 டன் கொய்யா ஏற்றுமதி செய்யப்பட்டது. இது, 2007&08ம் ஆண்டில் 2 ஆயிரத்து 495 டன்னாக உயர்ந்துள்ளது. இதன் மதிப்பு ரூ.4 கோடியே 17 லட்சம்.

***தென் மாநிலங்களில், மாங்காய் உற்பத்தி 35% சரிவடையும் நிலை***
***தமிழகத்தில் விளைச்சல் குறைய வாய்ப்பில்லை***

*அருண் ஐயர்*

*பெங்களூர்*

*நாட்டின் மொத்த மாங்காய் உற்பத்தியில் தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் கர்நாடகா ஆகிய தென் மாநிலங்களின் பங்களிப்பு சுமார் 40 சதவீதமாக உள்ளது. நடப்பு ஆண்டில் ஆந்திரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில்*

*மாங்காய் உற்பத்தி ஒட்டுமொத்த அளவில் 35–40 சதவீதம் சரிவடையும் என்று கூறப்படுகிறது. எனினும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இதன் உற்பத்தியில் குறைவோ, அதிகரிப்போ இருக்காது என மதிப்பிடப்பட்டுள்ளது.*

*ஆந்திர மாநிலம்*

*ஆந்திர மாநிலத்தில் உள்ள மாந்தோப்புகளில் உள்ள மரங்கள் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் பூத்திருக்க வேண்டும். ஆனால் இந்த இரண்டு மாதங்களில் வழக்கத்திற்கு மாறாக இரவு நேரங்களில் அதிக வெப்ப நிலை நிலவியது. இதனால், சித்தூர் பகுதியில் மாமரங்கள் பூப்பது தாமதம் அடைந்துள்ளது.*
*ஆந்திர மாநிலத்தின் மொத்த மாங்காய் உற்பத்தியில் சித்தூர் பகுதியின் பங்களிப்பு 13 சதவீதமாகும். இங்கு தோதாபுரி என்ற ரக மாம்பழங்கள் மிக அதிக அளவில் விளைகின்றன. ஆந்திராவில் விளையும் மாங்காய்களில் 60 சதவீதம் தோதாபுரி ரகம் என்பது குறிப்பிடத்தக்கது. சித்தூர் பகுதியில் மாம்பழத்திலிருந்து கூழ் மற்றும் பழ ரசங்கள் தயாரிக்கும் தொழிற்பிரிவுகள் அதிக அளவில் உள்ளன.*

*கர்நாடகா மாநிலத்தில், சென்ற 2009 காலண்டர் ஆண்டில் மாங்காய் உற்பத்தி 8 லட்சம் டன்னாக இருந்தது. இது, நடப்பு ஆண்டில் 2–2.50 லட்சம் டன்னாக மிகவும் குறையும் நிலை உருவாகி உள்ளது என கர்நாடக மாநில தோட்டக் கலை துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.*

*தமிழ்நாடு*

*தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, மாங்காய் உற்பத்தி பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை என விவசாயிகள் தெரிவித்தனர். தமிழகத்தில் சேலம், கிருஷ்ணகிரி, ஓசூர் ஆகிய பகுதிகளில் மாங்காய் அதிக அளவில் விளைகிறது. நோய் தாக்குதல் போன்ற இடர்பாடுகளால் உற்பத்தி சிறிது பாதிக்கப்படும் என்றாலும் மாநிலத்தில் சுமார் 8 லட்சம் டன் மாங்காய்கள் உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

**மீன்பிடி ஒழுங்குமுறை மசோதா இப்போதைக்கு தாக்கல் ஆகாது**
**மீனவர் பிரதிநிதிகளிடம் சரத்பவார் உறுதிமொழி**

*புதுடெல்லி, பிப்.4–*

*"கடல்சார் மீன்பிடி ஒழுங்குமுறை மசோதா, இப்போதைக்கு தாக்கல் ஆகாது" என்று, மீனவர் பிரதிநிதிகளிடம் மத்திய மந்திரி சரத்பவார் உறுதி அளித்தார்.*

*கடல்சார் ஒழுங்குமுறை மசோதா*

*இந்திய கடல் பகுதியில் எல்லையை தாண்டி மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு ரூ.9 லட்சம் வரை அபராதம் விதிப்பது, மீன்பிடி படகுகளை பறிமுதல் செய்வது உள்பட பல்வேறு கடுமையான கட்டுப்பாடுகள் கொண்ட இந்திய கடல்சார் மீன்பிடி ஒழுங்குமுறை மசோதா ஒன்றை அறிமுகப்படுத்த, மத்திய அரசு ஆலோசித்து வருகிறது.*

*இதற்கு தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகம் உள்பட 9 கடலோர மாநிலங்களை சேர்ந்த மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். இந்த மசோதாவில் இடம் பெற்றுள்ள கட்டுப்பாடுகளை நீக்கும்படி தமிழக முதல்–அமைச்சர் கருணாநிதி, மத்திய வேளாண்துறை மந்திரி சரத்பவாருக்கு கடிதம் எழுதி இருக்கிறார்.*

*பிரதிநிதிகளுடன் சந்திப்பு*

*இந்த நிலையில், கடந்த மாதம், அனைத்து மீனவர் சங்கங்களுடன் மீன் வளத்துறை செயலாளர் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடந்தது. இதன் தொடர்ச்சியாக 9 மாநில மீனவர் சங்க பிரதிநிதிகளுடன் மத்திய மந்திரி சரத்பவார் நேற்று டெல்லியில் ஆலோசனை நடத்தினார்.*

*இந்த கூட்டத்தில், வரைவு மசோதாவில் இடம் பெற்றுள்ள கட்டுப்பாடுகளுக்கு மீனவர் சங்க பிரதிநிதிகள் கடும் ஆட்சேபம் தெரிவித்தனர். கூட்டத்தில் சரத்பவார் பேசியதாவது:–*

*இப்போதைக்கு தாக்கல் இல்லை*

*கடல்சார் ஒழுங்குமுறை மசோதா பற்றி விவாதிக்க வரும் 12–ந் தேதி கடலோர மாநிலங்களின் மீன் வளத்துறை மந்திரிகளின் மாநாடு நடக்க இருக்கிறது. அப்போது இது பற்றி விரிவாக ஆலோசிக்கப்படும். இந்த மசோதாவை நிறைவேற்றுவதில், மாநிலங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது.*

*மாநில அரசுகளை கலந்து ஆலோசிக்காமல் ஒரு அங்குலம் கூட மசோதாவை அடுத்த கட்டத்துக்கு நகர்த்த மாட்டோம்.*

*அனைத்து மாநில அரசுகள் இடையே கருத்து ஒற்றுமை ஏற்பட்ட பின்தான் இந்த மசோதா அமைச்சரவை ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த மசோதா, பாராளுமன்றத்தில் இப்போதைக்கு தாக்கல் ஆகாது. இவ்வாறு சரத்பவார் பேசினார்.*

*வெளிநாட்டு கப்பல்கள்*

கூட்டம் முடிந்த பின், மீனவர் சங்க கூட்டமைப்பின் தலைவர் ஜி.கே.மூர்த்தி நிருபர்களிடம் கூறுகையில், “இந்திய அரசின் மீன்பிடி ஒழுங்குமுறை மசோதாவில் உள்ள கடுமையான விதிகளை நீக்க வேண்டும். இந்திய கடல் பகுதியில் மீன்பிடிக்கும் பன்னாட்டு கப்பல்களுக்கும், படகுகளுக்கும் முழுமையான தடை விதிக்க வேண்டும் என்று வற்புறுத்தி இருக்கிறோம்” என்றார்.